24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 221 ஆனி 23 ஆம் நாள் திங்கட்கிழமை 08 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# முஸ்லிம்களின் உதவியின்றி தமிழருக்குத் தீர்வு கிட்டாது!

## ஹரீஸ் எம்.பி. இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8
முஸ்லிம்களின் உதவிகள் இன்றி தமிழர்களுக்குத் தீர்வு கிட்டாது என்று தெரிவித்தார் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ். கல்முனை மாநகரம் முஸ்லிம்களின் தாயகம் அதை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.
கல்முனை பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை சாய்ந்தமருது தனியார் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஸஹ்ரான் எனும் சிறிய குழுவினர் 19

# இலங்கையில் தொடர்கிறது இன அழிப்பு!

## பழ.நெடுமாறன் கொதிப்பு

சென்னை, ஜூலை 8
இலங்கையில் இன அழிப்பு நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது என உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.
தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உலகத் தமிழர் பேரமைப்பு சார்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தொடங்கிய முள்ளிவாய்க்கால் படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் மாநாட்டில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்ந்தது. இதில், ஒன்றரை இல்ட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஈவு இரக்கம் இல்லாமல் படுகொலை செய்யப்பட்டனர்.
இது குறித்து, ஐ.நா. மனித உரிமை ஆணையம் பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது. ஆனால், இது வரை எத்தகைய விசாரணையும் நடைபெற 19


# வறட்சிப் பாதிப்பு: வடக்கு முதலிடம்!

## 193, 170 பேருக்கு தாக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாணத்தில் வெய்யிலின் கொடுமை மக்களை வாட்டி வதைக்கிறது. இலங்கையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்ட மாகாணங்களில் வடக்கு மாகாணமே முதலிடத்தில் உள்ளது என்கிறது புள்ளி 19

# இலங்கைத் தேசம் சிங்களவர்களதே!

## காவிகளின் பலத்துடன் சிங்கள அரசை அமைப்போம் என்று கண்டியில் ஞானசார தேரர் நேற்றுச் சூளுரை



கொழும்பு, ஜூலை 8
'இலங்கை சிங்களவர்களின் நாடு. தமிழர்கள் இதனால் கோபிக்கக் கூடாது. எல்லாவற்றுக்கும்போல் நாட்டுக்கும் ஒரு சொந்தக்காரன் இருக்க வேண்டும். நாங்கள்தான் இலங்கையின் வரலாற்றைக் கட்டியெழுப்பிய இனம். நாங்கள் கள்ளத்தோணி அல்ல. உலகில் சிறுபான்மை என்றாலும் நாங்கள் மதிப்பான இனம்.' 19

# பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றத்திடம் வினவுகிறார் மைத்திரி

## வியாழனன்று விளக்கம் கேட்கின்றார்

கொழும்பு, ஜூலை 8
தனது பதவிக்காலம் எப்போது சரியாக ஆரம்பிக்கின்றது என்பதுபற்றி இந்த வாரம் உயர்நீதி மன்றத்திடம்வினவ 19

ஜனநாயகப் பயணத்தின்

# சரியான பாதை 19ஆம் திருத்தம்!

## ஆயர் பேரவை அறிக்கை

கொழும்பு, ஜூலை 8
நிறைவேற்று அரச தலைவரின் வரம்பற்ற அதிகாரங்களைக் 19

# 4 பயங்கரவாத அமைப்புக்களுடன் உலமா சபைக்கு நேரடித் தொடர்பு

## கண்டி மாநாட்டில் போட்டுத்தாக்கினார் ஞானசாரர்

கொழும்பு, ஜூலை 8
'இலங்கை உலமா சபை 4 பயங்கரவாத அமைப்புக்களுடன் நேரடித் தொடர்புகளை வைத்துள்ளது. அவர்களுடன் பேசுவதை அரசியல் தலைவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். இப்படியே சென்றால் நாட்டில் இருந்து நீங்கள் செல்ல 19

# தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

## கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி, ஜூலை 8
கிளிநொச்சியில் தொடருந்து மோதி ஒருவர் நேற்று உயிரிழந்தார். கிளிநொச்சி 55ஆம் கட்டைப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற 19

# 70 பவுண் நகைகள், ரூ.10 லட்சம் பணம் வடமராட்சியில் சனியன்று கொள்ளை

## வடமராட்சியில் பரபரப்பு

வடமராட்சி, ஜூலை 8
வடமராட்சியில் நேற்றுமுன்தினம் இரவு மிகப்பெரிய கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுமார் 70 பவுண் நகைகளும், 10 லட்சம் ரூபாவும் அவ்வாறு கொள்ளையி 19

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
• Bachelor of Information Technology
• Bachelor of Business Administration
• BSc in Psychology
• Bachelor of Business in Banking & Finance
• B.Ed (Teaching of English as Second Language-TESL)
✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
For more information: 0777 174 443

Entry requirement
HND / any Equal Qualification in the similar study
BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

(தொடர்ச்சி)

# எந்த ராசிக்காரர்களுக்கு எந்த நாள் அதிர்ஷ்டம்




**கன்னி:**
கன்னி ராசிக்காரர்களுக்கு புதன், வெள்ளி, திங்கள் மற்றும் வியாழக் கிழமைகள் அதிர்ஷ்டத்தை வழங்கும் தினங்கள். ஞாயிறு, செவ்வாய், சனி போன்ற தினங்களில் எந்த ஒரு முக்கியமான மற்றும் புதிய விடயத்தையும் மேற்கொள்ளாதீர்கள். இல்லாவிட்டால், தாங்க முடியாத அளவில் படுதோல்வியை சந்திக்கக்கூடும்.

**துலாம்:**
இந்த ராசிக்கு வெள்ளிக்கிழமை அதிர்ஷ்டத்தை வழங்கும் நாள். இந்நாளில் உங்களது ராஜதந்திர மனோபாவம், நிறைய மக்களுடன் பழகவும், அதிக புகழையும் வாங்கித் தரும். மொத்தத்தில் இந்நாள் உங்களை உயரச் செய்யும்.

**விருச்சிகம்:**
ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகள் விருச்சிக ராசிக்காரர்களுக்கு சிறப்பான தினம். இந்நாளில் எந்த காரியத்திலும் வெற்றி கிட்டும். புதன் மற்றும் சனிக்கிழமைகள் சாதகமற்றது. இந்நாளில் எந்த ஒரு முக்கிய விடயங்களையும் மேற்கொள்ள வேண்டாம்.


**தனுசு:**
தனுசு ராசிக்காரர்களுக்கு வியாழக்கிழமை அதிர்ஷ்டமான தினம். இந்நாளில் உங்களது திறமை முழுமையாக புலப்படும். எனவே நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கும் காரியங்களை இந்நாளில் மேற்கொள்வது வெற்றியைத் தரும்.

**மகரம்:**
இந்த ராசிக்காரர்களுக்கு சனிக்கிழமை உகந்தது. இந்நாளில் இவர்கள் செய்ய நினைக்கும் செயல்களை மேற்கொண்டால், அவர் இதுவரை நினைத்திராத பலன் கிடைக்கும். இந்நாளில் இவர்கள் மிகவும் சுறுசுறுப்புடன் மற்றும் புத்துணர்ச்சியுடன் செயல்படக்கூடும். இதனால் அனைத்திலும் வெற்றி கிட்டும்.

**கும்பம் :**
கும்பராசிக்காரர்களுக்கு வியாழன், வெள்ளி, செவ்வாய் மற்றும் திங்கள் போன்ற தினங்கள் அதிர்ஷ்டமான நாட்கள். புதன் மற்றும் சனி அதிர்ஷ்டமற்ற நாட்கள். ஞாயிற்றுக்கிழமை கலவையானது.

**மீனம்:**
மீன ராசிக்காரர்களே! உங்களுக்கு வியாழக்கிழமை மிகவும் சிறப்பான நாள். இந்நாளில் உங்களது புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது மற்றும் இந்நாளில் நீங்கள் எதிலும் வெற்றி காண்பீர்கள்.

(முற்றும்)



# ஜுலை மாத ராசிபலன்கள் - 2019






ஜுலை மாதம் கடகம் ராசிக்காரர்களுக்கு ராசியில் செவ்வாய், புதன், ராசிக்கு விரைய ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், ராகு ஐந்தாம் வீட்டில் குரு ஆறாம் வீட்டில் சனி கேது என கிரகங்களின் சஞ்சாரம் அமைந்துள்ளது. 12இல் சுக்கி ரன் சூரியன் இருந்தாலும் ராசி மீது குரு பார்வை விழுவதால் சுப விரையுங்கள் ஏற்படும்.

வியாதிகளில் இருந்து நிவர்த்தியடையும். உறவுகள் அன்பால் உங்களை ஆதரிப்பார்கள். செலவு நிறைய இருக்கும் கூடவே வரவும் வரும். புதிய திருப்பங்கள் ஏற்படும். இந்த மாதத்தில் கிரகங்களின் சஞ்சாரத்தைப் பொருத்து கடகம் ராசிக்காரர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, திருமண யோகம் எப்படி என்று பார்க்கலாம்.

**அன்பும் பாசம் கூடும்**

கடக ராசியில் செவ்வாய் நீசம் பெற்று இருக்கிறார். 4ஆம் திகதி கடகம் ராசியில் சந்திரன் சஞ்சரிக்கும் செவ்வாய் பலம் பெற ஆரம்பிப்பார். காதல் விவகாரங்கள் வெற்றி பெறும். மாத முதல் வாரத்தில் செவ்வாய் சந்திரன் இணைகிறார். செவ்வாய் உங்க ராசிக்கு முக்கியமானவர். கடகத்தில் நீசமாக சஞ்சரிக்கிறார் பலஹீனமடைகிறார். 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் சந்திரன் இணையும் போது அன்பும் பாசமும் அதிகரிக்கும். கடகம் இந்த மாதம் உற்சாகமடைய காரணம் குருவின் பார்வை செவ்வாய் மீது விழுகிறது. விருச்சிகத்தில் இருந்து கடகத்தை குரு பார்க்கிறார். செவ்வாய், சந்திரன், குரு இந்த மாதம் உங்களை காப்பாற்றும். ராகு கேது வினால் இந்த மாதம் இடையூறு இல்லை.

**பணவருமானம்**

தொழில் ஸ்தானதிபதி செவ்வாய் கடகத்தில் அமர்வது யோகம். மாதம் முழுவதும் உங்கள் ராசியில் இருப்பதால் சுய தொழில் யோகம் கூடி வரும் தொழில் செய்பவர்களுக்கு புதிய சிந்தனைப் பற்றிய எண்ணம் தோன்றும். முருகனை வழிபட செய்தொழில் சிறப்படையும். பொருள்களை அதிகம் வாங்கி வைக்க வேண்டாம். உங்களின் பணவருமானம் இருந்தாலும் நிறைய தடைகள் வரும் செலவுகளும் அதிகரிக்கும்.

**உடல்நலனில் அக்கறை**

இரண்டாம் அதிபதி சூரியன் 17ஆம் திகதிக்கு மேல் உங்கள் ராசிக்கு வரும் போது பணவருமானம் அதிகரிக்கும். சூரியன் சனி பார்க்கும் இந்த காலகட்டத்தில் கவனம். நெருங்கிய நண்பர்களின் உடல்நலனிலும் உங்க உடல்நலனிலும் அக்கறை காட்டுங்கள். கந்த சஷ்டி கவசம் படித்து முருகனை வழிபடலாம்.

**எச்சரிக்கை தேவை**

ஆறில் சனி, கேது ராசியில் செவ்வாய் சுக்கிரன் சேர்க்கையால் சில ஏமாற்றங்களையும் நம்பிக்கை மோசடிகளையும் சந்திக்க நேரலாம். அதிகமாக கடன் வாங்க வேண்டாம். சட்டத்திற்கு புறம்பான செயல்களைச் செய்ய வேண்டாம் அப்புறம் தண்டனை கிடைக்கும். மாத இறுதியில் செவ்வாய் சுக்கிரன் சேர்க்கை கூடவே குரு பார்வை இருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் பெண்கள் பாதுகாப்பில் கவனமாக இருங்கள். குரு பகவான் பார்வை உங்களைக் காப்பாற்றும். எனவே பெரியவர்களின் அறிவுரைகளை கேட்கவும். கணவன் - மனைவி உறவில் கவனம் தேவை. ஆண் நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை.

# தனுசு ராசிக்காரர்களின் குணநலன்கள்

## அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவர்கள்




தனுசு ராசிக்காரர்கள் சிறந்த ஆன்மிகவாதிகளாக இருப்பார்கள். நாத்திகவாதிகளாக இருந்தாலும், தங்களுக்கு மேல் ஒரு சக்தி இருக்கிறதென்பதில் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டிருப்பார்கள். தனுசு ராசிக்காரகள் சாஸ்திர சம்பிரதாயங்களில் மிகுந்த நம்பிக்கையும் அவற்றைக் கடைப்பிடிப்பதில் மனஉறுதியும் உள்ளவர்களாக இருப்பார்கள். முன்னோர்கள் சொன்ன வார்த்தைகளைக் கடைப்பிடிப்பார்கள். வீட்டின் மூத்தவர்கள் சொல்லும் சொற்களைக் கேட்டு அதன்படி நடப்பார்கள். தனுசு ராசிக்காரர்கள் அடுத்தவர்களுக்கு உதவுவதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். குருவின் ஆதிக்கத்தில் பிறந்த தனுசு, மீனம் ராசிக்காரர்கள் இருவருமே ஊருக்காக உழைத்துவிட்டு, வீட்டிலுள்ளவர்களிடம் நற்பெயர் எடுக்க மாட்டார்கள். 'எல்லோரும் நல்லவரே' என நம்பி ஏமாந்து போவார்கள். அப்படியே ஏமாந்தாலும், ஆத்திரப்பட மாட்டார்கள். "பணம் வேண்டுமா, புகழ் வேண்டுமா?" என்றால் "புகழ்தான் வேண்டும்" என யோசிக்காமல் சொல்லுவார்கள்.

தான் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியைத் தானமாக வழங்குவார்கள். மஞ்சள் இவர்களுக்குரிய ராசியான நிறம். வங்கித்துறை, ஆன்மிகம், கோயில், ஆசிரியர் பணி ஆகியவற்றில் ஈடுபட்டுப் புகழ்பெறுவார்கள். இவர்கள் வணங்க வேண்டிய தெய்வம் தட்சிணாமூர்த்தி மற்றும் சிவன். சிவ வழிபாடு, பிரதோஷ வழிபாடு ஆகியவை இவர்களுக்கு விருப்பமுள்ளதாக இருக்கும். தூரதேச பயணங்களில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள்.



உ
சிவமயம்


## உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்

# தங்கரத திருவிழா

**இன்று (08.07.2019) திங்கட்கிழமை**

**வெகுசிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது**

**திருவிழாவின்போது விசேட நிகழ்வாக**
**இலங்கையின் புகழ்பூத்த**
**தவில் நாதஸ்வர வித்துவான்களின் இசைச் சங்கமம்**
**இடம்பெறும்.**



நாத இசைச் சங்கமம்

**ஆஸ்தான வித்துவான் சிவதாஸ் குழுவினர்**

**நாதஸ்வரம் - தவில்**

கோண்டாவில் நாதஜோதி
**S.சிவதாசன் குழுவினர்**

சாவகச்சேரி
பஞ்சாபிகேசனின் பேரன்
**சித்தாத்தன் குழுவினர்**


வழக்கம்பரை நாதஸ்வரதிலகம்
S.சிவகுமார்

வட்டுக்கோட்டை
**சீலன் குழுவினர்**

**7 ஆம் திருவிழா உபயகாரர்கள்**
**பரிபாலன சபையினர்**

# மரண அறிவித்தல்

## சுப்பு மாரிமுத்து



தோற்றம் 10.07.1927 | மறைவு 04.07.2019

அராலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பு மாரிமுத்து 04.07.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பு - பாரு தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குஞ்சர் - பொன்னு தம்பதியரின் மருமகனும், தங்கச்சியம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, அன்னம் மற்றும் இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகம்மா, குணரட்ணம், மல்லிகா, இராசேந்திரம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மகேந்திராதேவி மற்றும் துரைசிங்கம் (பிரான்ஸ்), வசந்தி, யசிநந்தினி ஆகியோரின் மாமனும், சர்மிலதா - மோகனரஞ்சன் (ஆசிரியர் - யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சர்மிலதன் - வதனா (லண்டன்), சதீஸ்வரன் (பிரதி அதிபர் - யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்) - சாவித்திரி, பிரதீஸ்வரன் - ரூபி, மயூரதன் (பிரான்ஸ்) - நிஷாந்தினி, நிரூபன் (கணக்காளர் - பிரான்ஸ்), நிதாசன் (பொறியியலாளர் - பிரான்ஸ்), நிபூர்ணா (தாதி - பிரான்ஸ்), தர்சிகா (மருத்துவ ஆய்வு கூட பரிசோதகர்) - காந்தீயன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), பகீர்த்திகா (நிர்வாக உத்தியோகத்தர் - JSAC), கிதுஷன், தரங்கினி ஆகியோரின் பாசமிகு பேரனும், சுலக்சன், மாந்தாங்கினி, சைலஜன், விபிசாலினி, நித்திகா, கபிக்சன், சஹானா, ஷாலினி, அபிநாத், ஹரணிகா, சஷ்வின் ஆகியோரின் ஆசைப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(cs.25902) (13.17)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் பொன்னுத்துரை



தோற்றம் 15.04.1925 | மறைவு 07.07.2019

காரைநகர் மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகவும், காரைநகர் சந்தம் புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் பொன்னுத்துரை நேற்று (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், நீலாம்பிகை, நாகரத்தினம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் செல்வராணி, உமாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற க.ஜெகசோதி மற்றும் தி. திருநாவுக்கரசு, திருமதி பா.அருளாம்பிகை, பொ.லோகேஸ்வரன், ச.சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானந்தன், ராதா, சர்வானந்தன், சாந்தினி, நிரஞ்சன், காலஞ்சென்ற நிஷாந்தன் மற்றும் நிர்மலன், பிரசாந்தன், பிரவீனா, காயத்திரி, தினேசன், கஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சீத்தானி, நதினி, ஜானுசா, ஹர்ஷா, அபிநயா, லக்ஷா, ஹரிணி, மகதி, நிரந்தரி, போஜன், சஞ்சரி, நதுனன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற க.முருகேசு மற்றும் நல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரப்பிள்ளை, செல்லம்மா, சௌந்தரம், பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2019) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுறோட்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 241 4137

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## விவசாயபீட புதிய சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

மேற்படி சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகர் பொதுநிருவாகக்கிளையில் 19.07.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இரண்டாயிரமும் (2000.00), மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐந்நூறும் (500.00) தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப்படிவங்களை அறிவியல்நகர் பொதுநிருவாகக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "விவசாயபீட புதிய சிற்றுண்டிச்சாலைக்கான விண்ணப்பப்படிவம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அறிவியல்நகரில் அமைந்துள்ள பொதுநிருவாகக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அலுவலக தொலைபேசி இலக்கம்: 021-2060180.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**04.07.2019**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### நவரட்ணம் ரகுநாதன்

கடந்த 10.06.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் நவரட்ணம் ரகுநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகள் நாளை(09.07.2019) செவ்வாய்க் கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையில் இடம்பெறும். 10.07.2019 புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் பிரிவால் துயருற்ற வேளைஇறுதிச்சடங்கில் கலந்து கொண்டோர், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங் களினூடாக துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**"இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்."**

**இல. 38. மாரியம்மன் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**
**076 870 2698, 021 222 1979**

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை அருட்பிரகாசம்
**(இளைப்பாறிய மின் அத்தியட்சகர்)**



**தோற்றம்** 17.01.1944 **மறைவு** 05.07.2019

வட்டுக்கோட்டை வடக்கு கலைநகரினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளைஅருட்பிரகாசம்05.07.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தர் முருகுப்பிள்ளை - முருகுப்பிள்ளை தங்கச்சி யம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் குமாரசாமி - சிவஞானம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்) ஆருயிர்க் கணவரும், சுகந்தினி (பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), உமையாள் (MLT.UK), அருட்குமரன் (UK), காயத்திரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தவேல் விசுவநாதம் (மருத்துவ பொறியியலாளர்), பரராசசிங்கம் வேணு கோபன் (UK), கௌசிகா (UK) ஆகியோரின் மாமனாரும், அரசகுலசிங்கம், டாக்டர் முருகு. நல் லசேகரம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம், இராஜலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான கண்மணியம்மா, பரராஜசிங்கம், கனகதம் பிராசா, விமலாதேவி மற்றும் சுபோதினி, சிவானந்தன், பரமானந்தன், சச்சிதானந்தன் ஆகி யோரின் மைத்துனரும், ஜெயலட்சுமி, சண்முகானந்தசிவம் ஆகியோரின் பாசமிகு உடன்பி றவாச்சகோதரரும், ஐயாத்துரை (UK) மற்றும் சரஸ்வதி (UK), ஜெயசாந்தி (UK), சிவச்செல்வி (UK) ஆகியோரின் உடன்பிறவா சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2019) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலைநகர், வட்டுவடக்கு,**
**சித்தங்கேணி.**

(CS/26528)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**0212250950**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 24 . 07 . 1943



**உதிர்வு** 10 . 07 . 2016

இணுவில் மேற்கைச்சேர்ந்த

### அமரர் ஆழ்வாப்பிள்ளை சின்னாச்சி

திதி: வளர்பிறை ஷஷ்டி (08.07.2019)

**அவர்களின் நினைவுகளுடன்**



ஆண்டுகள் மூன்று போனதம்மா
ஆறாது உங்கள் ஞாபகங்கள்
மீண்டும் இங்கு வந்திடம்மா
மீளாது உந்தன் நினைவலைகள்
மாண்டு போக முடியாமல்
மௌனமாக அழுகின்றோம்
மீண்டும் இன்பம் தரமாட்டாயோ
– எனத் தினம் தினம் தவித்தபடி....
மனதோடு போராடும் மறையாத
– ஞாபகங்களுடன்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.




தகவல்:
**ஆ.சிறிதரன் (ஜேர்மனி)**

உங்கள் பிரிவின் துயரால் கரைந்துருகும்
**பிள்ளைகள்**

E,S Printers
**357, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 10 . 04 . 1957



**மறைவு** 05 . 07 . 2019

### பழனி இராஜேஸ்வரன்

காந்திஜீ வீதி, கொக்குவில் மேற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பழனி இராஜேஸ்வரன் கடந்த (05.07.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகம்மா தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் ராயு, யசோ, ரூபன், விசி, பொபி ஆகியோரின் தந்தையும் சாளினி, றொசானி, நதியா, வசி ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலாம்பிகை, லீலா, பரமேஸ்வரி, ஈசன், ரவி, சிறி காலஞ்சென்ற இந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜாக்கிளின், செமினா, பிரயினா, றக்சனா, அபிஷன், அஸ்வின், அக்ஷித், அபிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2019) திங்கட்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காந்திஜீ வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மணிவிழா வாழ்த்துக்கள்

26.05.2019



திருமதி

**அமிர்தகௌரி பரலோகராஜா**

B.A (Hons), Dip in Edu

உப அதிபர்

யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

**சேவை விபரம்**

05.08.1984 - 08.06.1990
கொழும்பு கொட்டாஞ்சேனை அ.த.க பாடசாலை

09.06.1990-31.12.2000
யா / மிருசுவில் அ.த.க பாடசாலை

01.01.2001 - 07.02.2010
யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலயம்

08.02.2010 - 26.05.2019
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

Best Wishes

எமது பாடசாலையில் 10 வருடங்கள் வரலாறு பாட ஆசிரியையாகவும் உப அதிபராகவும் கல்விச்சேவையில் மொத்தமாக 35 வருடங்களை பூர்த்திசெய்து ஓய்வுபெறும் மணிவிழா நாயகியின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

## கண்ணீர் அஞ்சலி




யாழ் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் முன்னை நாள் பிரதி ஆணையாளராக கடமையாற்றிய **ம. பற்றிக் டிறஞ்சன்** அவர்களின் பாசமிகு தாயார்

**மேரி யூக்கிறிஸ்தா மரியதாஸ்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**யாழ்மாவட்ட கமநல சேவைகள் நிலைய முகாமைத்துவ உதவியாளர்கள்**





## பாத்திரமறிந்து உதவி செய்வோம்

ஒரு ஆட்டு மந்தையினுள் புகுந்து ஆடுகளைஅடித்துக் கொல்ல முயன்றது ஓநாய் ஒன்று. அந்த ஆட்டு மந்தையின் காவலாக இருந்த நாய்கள் ஓநாயைத் துரத்திப் பிடித்து நன்றாக அடித்துப் போட்டு விட்டன.

படுகாயம் அடைந்த ஓநாய் நடக்க முடியாமல் வேதனையுடன் ஓரிடத்தில் படுத்திருந்தது. அதற்குக் கடுமையான பசி வேறு. அந்த சமயத்தில் அந்த வழியாக ஒரு ஆடு சென்றுக் கொண்டிருந்தது.

ஓநாய் அந்த ஆட்டைக் கூப்பிட்டது.

அதனிடம், "நண்பா! எதிரிகளால் நான் காயப்பட்டு நடக்க முடியாமல் இருக்கின்றேன். தண்ணீர் தாகமாக உள்ளது. எனக்குக் கை கொடுத்து நீரோடை வரை அழைத்து செல். நான் தாகத்தை தணித்துக் கொள்வேன்" என உருக்கமாகக் கேட்டது.

ஓநாயின் கபட நாடக த்தை அறியாத ஆடு, அதன் மீது அனுதாபம் கொண்டு, அது நடப்பதற்கு உதவ அதன் அருகே சென்றது.

கைக்கு எட்டும் தொலைவில் ஆடு வந்ததும் ஓநாய் அதன் மீது பாய்ந்து, அதை அடித்துக் கொன்று தன் பசியைத் தீர்த்து கொண்டது

பிறர் துன்பப்படும் போது நம்மால் முடிந்த உதவியை செய்ய வேண்டியது நம் கடமை.

ஆனால், அதே நேரம், யாருக்கு உதவுகிறோம் என் பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.


## எறும்புக் கூட்டம்

சிற்றெறும்பு ஒன்று
வீட்டைச் சுற்றி வந்தது
சிதறிக் கிடந்த ரொட்டித்
துண்டைக் கண்டு
கொண்டது

பற்றியதை இழுத்துச்
செல்ல
முயற்சி செய்தது
பலிக்கவில்லை, வந்த
வழி
பயணம் செய்தது

சற்று நேரம் கழித்து
மீண்டும்
திரும்பி வந்தது
சங்கிலி போல் எறும்புக்
கூட்டம்
தொடர்ந்து வந்தது

ஒற்றுமையாய் இரை
யைக் கவ்வி
இழுத்துச் சென்றது
ஒன்று பட்டால் உண்டு
வலிமை
உணர்த்திச் சொன்னது!



## வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்





## மரண அறிவித்தல்

### திருமதி அம்பலம் கனகம்மா



பிறப்பு 08.10.1937 இறப்பு 07.07.2019

மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பலம் கனகம்மா நேற்று (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலத்தின் அன்பு மனைவியும் தேவி, திருச்செல்வம், யமுனா, கமலநாதன், சறோ, வசந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற நா. மார்க்கண்டு மற்றும் சி. சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரியும் காந்தி, செல்வம், திருச்செல்வம், மாலா, கலா, வசந்தி ஆகியோரின் மாமியாரும்காந்தா, சுதா, தயா, துசன், சயித்தா, மிதிலா, தீபா, திரிசா, கோபரன்(சுகாதாரத் திணைக்களம்), செந்தா (லண்டன்), கரன், தர்சன், பிரகாஷ், சிந்துசன், சாளி (பிரான்ஸ்), யசிந்தன், மதுசன், டிலக்சனா, சர்மி, பிந்து, அங்குசன் (மலேசியா), புருசோத், லோசன், மிதுலன், நளின், சங்கீர்த்தன், லூசாந் (பிரான்ஸ்), ரேணுகன் (சுவிஸ்), பிரசன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2019) திங்கட் கிழமை பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மில் ஒழுங்கை லோட்டன் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்பலம் அன்னலெட்சுமி



வேலணை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் அன்னலெட்சுமி நேற்று (07.07.2019) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - அமிர்தவல்லி தம்பதிகளின் மகளும் அருணாசலம் - கமலாம்பிகை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் துணைவியாரும் காலஞ்சென்றவரான கௌரியம்மா சீவரெத்தினம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, காமாட்சியம்மா ஆகியோரின் மைத்துனியும் நாகேஸ்வரி, அருணகிரிநாதன், கமலநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி, மஞ்சுளாதேவி ஆகியோரின் மாமியாரும் கஜனி, பிரசன்னா, கஜானனி, குருபரன்-நிருஷா, அருண்ராஜ்-கிருசாந்தி , கார்த்திகா, சுவஸ்திகா, கீர்த்திகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் அதித்தியின் அன்பு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தில் அவரது இல்லத்தில் நாளை 09.07.2019 செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**

**பொ.அருணகிரிநாதன் (ஓய்வு நிலை பிரதிக்கல்விபணிப்பாளர்)
பொ. கமலநாதன் (குஞ்சு) (மகன்மார்)**

# சதுரங்கம்



- அரசர்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் சதுரங்கம் (Chess), இருவர் விளையாடும் ஒரு பலகை விளையாட்டு ஆகும்.
- ஒரு பக்கத்துக்கு 16 காய்கள் வீதம், 32 காய்கள் இவ்விளையாட்டில் பயன்படுகின்றன.
- ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக இரண்டு நிறங்களில் காய்கள் அமைந்திருப்பது வழக்கம்.
- விளையாடும் பலகை, 8 வரிசைகளிலும், 8 நிரல்களிலும் (8 x 8) அமைந்த மொத்தமாக 64 கட்டங்களைக் கொண்ட சதுர வடிவமானது.
- உலகம் பூராகவுமுள்ள பல மில்லியக்கணக்கான மக்களால் வீடுகளில், பூங்காக்களில், கழகங்களில், இணையத்தளத்தில், கணனியிலும் போட்டித்தொடர்களாகவும் விளையாடப்பட்டு வருகிறது.
- சதுரங்கம் மனித இனத்தின் பிரபல விளையாட்டுகளில் ஒன்றாகும். இது ஒரு விளையாட்டாக மட்டுமன்றி, ஒரு கலையாகவும் அறிவியலாகவும் கூட வர்ணிக்கப்படுவதுண்டு.
- இது சில சமயம் ஒரு போர் விளையாட்டாகவும், "மூளை சார்ந்த போர்க் கலை"யாகவும் பார்க்கப்படுவதுண்டு.
- தனது அரசனை பாதுகாத்துக் கொண்டு, எதிரியின் அரசனைப் பிடிப்பதே ஆட்டத்தின் சூட்சமம். எதிரி அரசனை, எதிரி தனது அரசனை பிடித்துவிடுவதற்கு முன்பு பிடித்துவிட்டால் வெற்றி கிடைத்துவிடும். விளையாட்டும் முடிவடைந்து விடும்.

# பரிசளிப்பும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம். ஜூலை 8

யாழ்ப்பாணம் கல்விசார் கிறிஸ்தவ ஐக்கியத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் தரம் 10, 11 மாணவர்களுக்கான கிறிஸ்தவப்பாட வினாவிடைத் தொகுப்பு நூல் வெளியிடும் யாழ்ப்பாணம் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையில் நேற்றுமுன்தினம் அந்த அமைப்பின் தலைவர் திருமதி எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது. கடந்த வருடம் இலங்கை கிறிஸ்தவம் சார் ஐக்கியத்தினால் நடத்தப்பட்ட வேதாகமப் பரீட்சையில் 60 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான தங்கப்பதக்கம் அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக அசம்பிளி ஒவ் கோட் திருச்சபைப் போதகர் சாம் இராஜசூரியரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் வண.டி. எஸ்.சொலமனும் றெஜின்போ சபையின் தலைமைப் போதகர் வண.ஜோயல் தேவகுமார் ரட்ணமும் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கருத்துரைகளும் இடம்பெற்றன. யாழ்ப்பாணம் கல்வி சார் ஐக்கியத்தின் செயலரும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் ஆசிரியருமான ஜெ.ஜெயமோகன் எழுதிய தரம் 10, 11 மாணவர்களுக்கான கிறிஸ்தவப்பாட வினாவிடைத் தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை வண. தேவகுமார் ரட்ணம் வெளியிட்டு வைக்க முன்னாள் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரும் இலங்கை கல்விசார் கிறிஸ்தவ ஐக்கியத்தின் நிர்வாக இயக்குனருமான ஏ.இ.எம். போல் முதற்பிரதியை பெற்றுக்கொண்டார். நூல் பற்றிய ஆய்வுரையை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய டி.எஸ்.சொலமன் வழங்கினார். (ம)


அகில இலங்கை ரீதியான
சமய அறிவுப் போட்டி விண்ணப்பம் பெற
thamilini.kulen@gmail.com
எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
(CS26393)(1.17)

## திருமண சேவை

59 வருட சேவையில் 3 ஆம் தலைமுறை கண்ட உலகப் புகழ் பூத்த சர்வதேச புலவர் திருமண சேவையுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விருப்பத்தின் படி திருமணத்தை நிறைவேற்றலாம்.

உள்நாடா? வெளிநாடா? PR உள்ளதா?
ஸ்பொன்சரில் வெளிநாடு போக வேண்டுமா?

"மதுரகானம்"
238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 7147/077 573 7301/076 887 8370
கிளை அலுவலகம்: சுவிற்சர்லாந்து Viber - 0041786040401
(CS 26525)(14.17)


## கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் முன்னை நாள் பிரதி ஆணையாளராக கடமையாற்றிய **ம. பற்றிக் டிறஞ்சன்** அவர்களின் பாசமிகு தாயார்


**மேரி யூக்கிறிஸ்தா மரியதாஸ்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
நலன்புரிச்சங்கம்
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ். மாவட்டம்

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ் 08 . 03 . 1954



கண் நெகிழ் 22 . 06 . 2015

**அமரர் சின்னத்துரை ஸ்ரீஸ்கந்தராஜா**
(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)

திதி:- பூர்வபக்க ஷஷ்டி (08.07.2019)

குன்றாத ஒளிவிளக்கே குடும்பத்தின் குலவிளக்கே!
பாசமுடன் உறவாடி நேசமுடன் எமை வளர்த்து
எமக்கு வாழ்வூட்டி வழிகாட்டிய தெய்வமே!!
அன்பின் அரவணைப்பாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் நீங்கள் எம்முடன்
வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும் அப்பா!!

என்றும் உங்கள் நீங்கா நினைவுடன்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ் 12 . 03 . 1941



கண் நெகிழ் 08 . 07 . 1993

அமரர்
**சிதம்பரி மகேந்திரம்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆண்டிருபத்தாறாயிடினும்
ஆறவில்லை எம்துயரம்
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டார் மீள்வதில்லை – என்ற
பட்டினத்தார் மொழிக்கு பழுதில்லை அவனியில்
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தார் மாண்புகழ்
மனைவியாலும் மக்களாலும் மறந்திடத்தான் முடியுமோ?
மரித்தநாளை விரத நாளாக்கி
துதிக்கின்றோம் ஆண்டவனாய் உமையே!
ஆண்டவன் அடியிணையில் சாந்திபெற்றீர் – எம்
சந்ததி நலனுக்காகவும் அனுதினமும் அருள் தாருமே!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் நும் அன்பினில் குடியிருக்கும்.....
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

**திருமதி பரமேஸ்வரி நடராசா (பொன்னார்)**
*(சங்கானை)*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பிளாக் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நடராசா (பொன்னார்) 06.07.2019 சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனர் ஆறுமுகம் பொற்கொடி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் கந்தரோடை காலஞ்சென்றவரான மலேசியன் பென்சனர் சின்னையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னையா நடராசா (முன்னாள் உத்தியோகத்தர் சின்னத்துரை அன் பிரதேர்ஸ் யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா, சரஸ்வதி, தனலட்சுமி, அன்னலட்சுமி, கந்தசாமி மற்றும் முத்தையா ஆகியோரின் அன்புச்சகோதரியும் பகீரதி (Norway), பகீரதன் (UK), ரேவதி (சங்கானை), ஆகியோரின் பாசமிகுதாயாரும் நந்தகோபால் (Norway), கிரிஜா (UK) ஆகியோரின் அன்பு மாமியும் சங்கமி (Norway), சாஜகி (Norway), லக்ஷனா (UK), அர்ச்சனா (UK) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2019) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிளாக் வீதி,
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்
021 225 1046, 077 612 4944

## மரண அறிவித்தல்

மலர்வு 18 . 09 . 1928



உதிர்வு 05 . 07 . 2019

**திருமதி சொர்ணலட்சுமி குருசாமி**

ஆலங்குளாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணலட்சுமி குருசாமி 05.07.2019 அன்று அன்னாரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருசாமியின் அன்பு மனைவியும், பிறேமகுமார் (இலங்கை), சுரேஸ்குமார் (லண்டன்), சுகுமார் (ரகு - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், கோகுலன் (பிருந்தன்), மதுரா, கிருசாந், டினேசன், வருஷன், த்ரிஷா, ஹரிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

தகவல்:
குடும்பத்தினர்.

077 728 6098
(CS 26524)(13.17)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வீறுகொண்டெழும் சிங்கள, பௌத்ததேசியம்

இலங்கைசிங்களவர்களின்நாடு. நாங்கள்தான்இலங்கையின் வரலாற்றைக் கட்டியெழுப்பிய இனம். நாங்கள் கள்ளத்தோணிகள்அல்லர். உலகில்சிறுபான்மைஎன்றாலும் நாங்கள் மதிப்பான இனம்.

இவ்வாறு நேற்றுக்கண்டியில் தான் ஆற்றிய உரையில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். ஆயிரக்கணக்கான பிக்குகள் மற்றும் சிங்கள மக்களைத் திரட்டி கண்டியில் நடத்திய மாநாட்டில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். தமது இந்த நிலைப்பாடு தொடர்பில் தமிழர்கள் வருத்தப்படக்கூடாது என்றும் தெரிவித்தார்.

தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதிகளில்நடத்தப்பட்ட தற்கொலைக்குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது அவரது கருத்து.

“சிங்கள அரசை அமைப்போம். சிங்களவர்கள் விரும்பும் அரசைஏற்படுத்துவோம். நாடாளுமன்றத்தில்சிங்களவர்கள் கோலோச்சும் நிலையை ஏற்படுத்துவோம். சிங்களவர்கள் முதுகெலும்புடன் இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேரில் குற்றம் செய்யாதவர்களைக்காணமுடியாது. இனத்துக்குத்தலைமைவழங்கக் கூடிய ஓர் அரசியல் கலப்பற்ற தலைவன் எமக்கு வேண்டும். சிங்களவரின் நாடாளுமன்றம் இன்று தேவை. சிங்களவருக்கு ஏற்றசட்டங்கள்தேவை. நமக்கானநாடாளுமன்றம் வேண்டும்.

காவிகளின் பலத்துடன் நாம் இந்த நாட்டை வெற்றியை நோக்கிக் கொண்டு செல்லலாம். எங்களால் இந்த நாட்டை நல்ல இடத்துக்குக் கொண்டு செல்லமுடியும். 70 வருடங்களாக இந்தநாட்டை வீணாக்கியவர்கள்வீட்டுக்குச்செல்ல வேண்டும். ஆட்சியைக்கைப்பற்றுவது எமது நோக்கமல்ல. ஆனால், ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எமக்கு இருக்க வேண்டும். இன்று சிங்களவர்களைசிங்களவர்களாக இருக்கவைக்க எமக்கு அரசியல் அதிகாரம் வேண்டும். அதற்காகநாம்பாடுபட வேண்டும்” என்றுதனது மேலதிக உரையில் அவர் தொிவித்தார்.

ஞானசாரரின்பேச்சுஏனைய இனங்களுக்குக்கோபத்தையும் சீற்றத்தையும்தரக்கூடியது. இலங்கைஎன்பது பல் இன, பல் கலாசார நாடு. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஒரு குடையின்கீழ் கொண்டுவருவதற்கு முன்னர் இந்த நாடு பல ஆட்சிகளாகப் பிரிந்தேதான்கிடந்தது, நவீன வரலாற்றுக்கு முன்னையகாலம்வரைக்கும், இலங்கை இந்தப்பன்மைத்துவத்தைத் தெளிவாகக் கொண்டிருந்தது ஆனால் இப்போது அதனைப் பின்தள்ளி, இந்தநாடு சிங்களவர்களுடைய நாடு என்று சொல்லி ஏகத்துவத்தைத் திணிக்க முற்படுகின்றது பௌத்த, சிங்கள தேசியம்.

ஞானசார தேரர் தெளிவாகக் கூறுகின்றார், தமக்கு ஆட்சியைப்பிடிக்கும் நோக்கம்கிடையாது. ஆனால், ஆட்சியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வேண்டும் என்கிறர். அதாவது இலங்கையில் நடப்பது அனைத்தையும் பௌத்த, சிங்கள, தேசியவாதம்மட்டுமேகட்டுப்படுத்த வேண்டும்என்பதை அவர் மிக வெளிப்படையாகவே சொல்கிறார்.

அந்தமுயற்சியில் அவர்ஏற்கனவே வெற்றிபெற்றிருக்கிறார் என்றேதான் சொல்ல முடியும். இன்றைய ஆட்சியாளர்கள் பௌத்த, சிங்களதேசிய வாதத்துக்கு ஆதரவாகச்செயற்பட முடியாதநிலையில்பதவியில் இருப்பதில் அர்த்தம் இல்லை என்கிற அவர் போன்றவர்களின் குரலுக்குப் பயந்து அடிபணிந்தே, புதிய அரசமைப்பு முயற்சியைக் கைவிட்டனர் இன்றைய ஆட்சியாளர்கள். ஏற்கனவே நிலமை அப்படியிருக்கும்போது இலங்கையில் சிங்கள, பௌத்த தேசியவாதத்தை நிலைநிறுத்தும் ஆட்சிதான் நடக்கின்றது என்கிற போது, அதனை மேலும் தீவிரப்படுத்த ஞானசார தேரர் போன்றவர்கள் முயற்சிப்பது நாட்டை அதளபாதாளத்தில் தள்ளிவிடும்.




# தன் நோக்கிலிருந்து விலகக்கூடாது ஜி-20

இப்போதெல்லாம் ‘ஜி-20’ அமைப்பின் உச்சி மாநாடானது அதன் தீர்மானங்களைவிட, அந்த நிகழ்ச்சிக்கு வரும் தலைவர்களிடையே நடக்கும் சந்திப்புகளுக்காகவும், துணுக்குச் செய்திகளுக்காகவும் மிகவும் கவனமாகப் பார்க்கப்படும் நிகழ்வாக மாறிக்கொண்டிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியமும் 19 நாடுகளும் இடம்பெற்றுள்ள இந்த அமைப்பினுடைய உறுப்புகளின் மொத்த உற்பத்தி மதிப்பைக் கூட்டினால், உலக உற்பத்தி மதிப்பில் 85 வீதம் அது. அத்தகு முக்கியத்துவம் மிக்க இந்த அமைப்பு ஆக்கபூர்வச் செயலாற்றினால் பெரும் மாற்றங்களை உண்டாக்க முடியும். ஆனால், ஏமாற்றங்களே மிஞ்சுகின்றன.




**இந்த வருட ஜி-20**

ஜப்பானின் ஒசாகாவில் சமீபத்தில் நடந்த ‘ஜி20’ உச்சி மாநாட்டின் 20 சந்திப்புகளில் பங்கேற்ற தலைமை அமைச்சர் மோடி பல முக்கியமான பிரச்சினைகளை எழுப்பினார். பொருளாதாரக் குற்றங்களை இழைத்துவிட்டு, வெளிநாடுகளுக்குத் தப்பியோடி புகலிடம் தேடும் கோடீஸ்வரர்களை அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவது பருவநிலை மாறுதலைத் தடுக்க கரிப்புகை வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்த வளர்ந்த நாடுகள் பங்களிப்பது தொடர்பான இரு வலியுறுத்தல்கள் அவற்றில் முக்கியமானன. ஜப்பான் தலைமை அமைச்சர் ஷின்சோ அபே அழைப்பு விடுத்தும் டிஜிட்டல் பொருளாதார உச்சி மாநாட்டில் பங்கேற்க மோடி மறுத்துவிட்டார். ‘மனிதர்களைப் பற்றிய தரவுகளைத் தடையில்லாமல் நாடுகள் பகிர்ந்துகொள்ள வேண்டும்’ என்பதுதான் அந்த மாநாட்டின் கருப்பொருள். ‘இந்தியர்கள் தொடர்பாகத் திரட்டப்படும் தரவுகள் இந்திய நாட்டுக்குள்ளேயே வைத்துப் பராமரிக்கப்பட வேண்டும்’ என்று இந்திய முடிவில் உறுதிகாட்டினார் தலைமை அமைச்சர். இவை யாவும் சரியான முன்னெடுப்புகள்.

**எதிர்பார்க்கப்பட்ட சந்திப்புக்கள் சில**

மாநாட்டில் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது ட்ரம்ப்-ஜி ஜின்பிங் இடையிலும், ட்ரம்ப் -மோடி இடையிலுமான சந்திப்புகள். காரணம் அமெரிக்கா-சீனா, இந்தியா இடையில் வர்த்தக உறவு சுமுக நிலையிலிருந்து விலகி, பரஸ்பரம் காப்பு வரியை உயர்த்தும் அளவுக்கு முற்றியதுதான். ஆனால், இந்தச் சந்திப்புகளுக்குப் பிறகு தீர்வுகளோ, பெரிய பேரங்களோ கை கூடிவிடவில்லை. பதற்றம் தணிந்தது என்பதுடன் இந்தத் தலைவர்கள் சுமுகமாகவே பேசிக்கொண்டார்கள் என்பதே பெரிய செய்தியாகிவிட்டது. முக்கியமான விஷயங்கள் விவாதிக்கப்பட்டாலும் பெரிய தீர்வுகளை உடனடியாக எட்ட முடியாததற்கு ‘ஜி-20’ தன் இலக்குக்கு வெளியிலும் அதிகம் பயணிப்பதே முக்கியமான காரணம். அடுத்த மாநாடு 2022ஆம் ஆண்டில் இந்தியாவில் நடக்கும்போது, ‘குன்றாத வளர்ச்சி, நிதி நிலையில் உறுதித்தன்மை’ எனும் தன் மூல லட்சியத்தில் எவ்வளவு உறுதியாக இருக்கிறோம் என்ற கேள்வியை ‘ஜி20’ நாடுகள் கேட்டுக்கொள்ள வேண்டும்.



நன்றி – தி ஹிந்து

# நாடு முழுவதும் 115,000 சிறுவர்கள் போதைக்கு அடிமையாக உள்ளனர்

*கொழும்பு, ஜூலை 8*

**நா**டு முழுவதும் 18 வயதுக்குட்பட்ட சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் பேர் ஹெரோய்ன், கஞ்சா, சிகரெட் மற்றும் மதுபானம் உள்ளிட்ட போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பு அரச தலைவர் செயலணி, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை மற்றும் பொலிஸார் இணைந்து இந்த ஆய்வினை மேற்கொண்டனர் என்று போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் தேசிய அதிகார சபையின் ஆலோசகர், டொக்டர் சமந்த கிதலவாரச்சி தெரிவித்தார்.

இதேவேளை, நாடு முழுவதும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர், ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்றும், சுமார் 3 இலட்சம் பேர் கஞ்சா பயன்படுத்துகின்றனர் என்றும் கிதலவாரச்சி குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, மேல் மாகாணத்திலேயே போதைப்பொருளுக்கு அடிமையானோர் அதிகமாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம)

## அரச தலைவர் தேர்தலின் போது கடமையில் ஈடுபடவுள்ளோருக்கு அடுத்த வாரமளவில் பயிற்சிகள்

கொழும்பு, ஜூலை 8

அரச தலைவர் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அரச அதிகாரிகளுக்கான பயிற்சிகளை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கவுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அரச தலைவர் தேர்தலுக்குத் தயாராகி வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

முதலில் மாகாண சபைத் தேர்தலை எதிர்பார்த்த போதிலும், பல்வேறு காரணங்களால் அந்தத் தேர்தல் தாமதமடைவதாகத் தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, அரசதலைவர் தேர்தலை உரியகாலத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கைஎடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

(ம)



## கோத்தபாயவை சிறையிட்டால் பெரும் உதவியாக அமையும்

### *கம்மன்பில கிண்டல்*

கொழும்பு, ஜூலை 8

அரச தலைவர் வேட்பாளராக பிவிதுரு ஹெல உறுமய சார்பில் கோத்தபாயவையே முன்மொழிகிறேன். அவரை சிறையில் போட்டால் தேர்தல் வெற்றிக்கு அது பெரும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்தார் கம்மன்பில.

அம்புல்தெனிய விடுதியில் நேற்று நடைபெற்ற அந்தக் கட்சியின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேட்பாளர் சிறையிலுள்ள போது தேர்தலை வெற்றி பெறுவது மிகவும் இலகுவான ஒரு கருமம். அது போன்ற ஒரு நிலைமையை உருவாக்கித் தரும் பணியை ஐக்கிய தேசியக் கட்சி செய்யுமாக இருந்தால், மாபெரும் உதவியாக இருக்கும். கூட்டணியொன்று அமைக்கும் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு மதிப்பான இடமொன்று தேவை என்றிருந்தால், அந்த உதவியை வழங்கத் தயாராக உள்ளோம் - என்றார்.

(ம)



## அறநெறிப் பாடசாலை அநுராதபுரத்தில் ஆரம்பம்

கொடிகாமம், ஜூலை 8

இலங்கை இந்துக் கட்சியின் நிதிப்பங்களிப்புடன் முதன்முதலாக அநுராதபுரம் தேவநம்பிய திஸ்ஸபுர சிறி முத்துமாரி அம்மன் ஆலயதின் 'சிறி அம்பாள்' அறநெறிப் பாடசாலை நேற்றுக் காலை ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் ஆலய தலைவர் மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், எழுதுகருவிகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இலங்கை இந்துக் கட்சியின் செயலர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சத்துணவு சமபோஷா, பால் என்பனவற்றை வழங்கினர். இதேபோல ஒவ்வொரு வகுப்பும் இடம் பெற வேண்டும் என்பதனையும் இதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

நிகழ்வில் இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் ஆலோசனைகள் வழங்கினார்.

(த-159)

## நாட்டில் 60 வீதமான மக்கள் வறுமைக்கோட்டுக்குள்தான்!

### *அங்கஜன் எம்.பி. தெரிவிக்கிறார்*

மருதங்கேணி, ஜூலை 8

இலங்கையில் 60 வீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளனர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி கிராம சக்தித் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமான இ.அங்கஜன் தெரிவித்துள்ளார். குடத்தனை வடக்கு சனசமூக நிலையத்தில் கிராம சக்தித் திட்டக் குழுக் கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராம சக்தித் திட்டம் என்பது வறுமையைப் போக்குவதற்கான திட்டம். போர் முடிந்து இன்றைக்கு 10 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் நாங்கள் எதிர்பார்த்த அபிவிருத்தி நடைபெற்று இருக்கிறதா என்றால் அவ்வாறு இல்லை. கிராம அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, தனிமனித அபிவிருத்தி, அரசியல் முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம் என்பன நடைபெற்றிருக்கின்றனவா என்றால் ஆராய்ந்துதான் பார்க்க வேண்டும். எதிர்பார்த்த அபிவிருத்தி அடையவில்லை என்றால் முதலில் நாட்டில் வறுமையைப் போக்க வேண்டும். நாட்டில் 3ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருமானம் பெறுபவர்கள் 7.6 வீதமாக உள்ளனர். 13 ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் 33 வீதம் உள்ளனர். 23 ஆயிரத்துக்கும் குறைவான வருமானத்தைப் பெறுபவர்கள்20 வீதத்துக்கு மேல் உள்ளனர். மொத்தத்தில் ஏதோ ஒரு வகையில் வறுமைக்குட்பட்ட 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இருக்கிறார்கள் - என்றார்.

(த-160)

## தற்போதைய ஆட்சியில்தான் ஊடகச்சுதந்திரம் நிலவுகிறது

### *ஊடகத்துறை அமைச்சர் பெருமிதம்*

கொழும்பு, ஜூலை 8

யார் என்ன விமர்சனம் செய்தாலும் கடந்த ஆட்சியை விடவும் தற்போதைய ஆட்சியில்தான் அதிகமான ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

மாத்தளையில் இலங்கை பத்திரிகைத்துறைச் சங்கத்தின் 30 வருட நிறைவையொட்டி நேற்று ஏற்பாடு செய்திருந்த விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எந்தவித அச்சுறுத்தல்களும் இன்றி ஊடகத்துறையை கொண்டு செல்ல நாம் அரசு என்ற வகையில் செயற்பட்டு வருகின்றோம். கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கடத்தல்கள், தாக்குதல்கள், வெள்ளை வேன், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் என்பன கடந்த நான்கு வருட காலத்தில் இலங்கையில் இடம்பெறவில்லை. நாம் அதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)



## வலி.மேற்கில் 25 சிறு வீதிகள் இந்த மாத இறுதியில் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள சிறிய வீதிகள் சீரமைக்கும் பணிகள் இந்த மாதம் இறுதியில்ஆரம்பிக்கப்படும் என்று சபை தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் சீரமைப்பின் தேவைகள் தொடர்பில் சபை மாதாந்தஅமர்வில் கலந்துரையாட பட்டது. அதற்கமைவாக வட்டார ரீதியாக 25 சிறிய வீதிகள் இந்த வருடத்துக்கானபாதீட்டில் சீரமைக்கப்படவுள்ளன. சுமார் 150 மீற்றர் நீளமான வீதி தலா 8 லட்சம் ரூபாவில்சீரமைக்கப்படவுள்ளது. சபை உறுப்பினர்களின் கோரிக்கைக்கு ஏற்ப வீதிகள் தெரிவு செய்யப்பட்டு நிதிஒதுக்கப்பட்டது. சீரமைப்புக்கான கேள்வி கோரல் தற்போது விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தார் வீதியாக 25 வீதிகள் சீரமைக்கும் பணிகள் இந்த மாத இறுதியில் ஆரம்ப மாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-7)

# கட்டாக்காலி கால்நடைகளால் பெருந்தொகை மரக்கறி அழிவு

## ஊர்காவற்றுறை சந்தை வியாபாரிகள் கவலை

ஊர்காவற்றுறை, ஜூலை 8

ஊர்காவற்துறை பிரதேச சபைக்குட்பட்ட பொதுச்சந்தை வளாகத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் மரக்கறிகளை கால்நடைகள் அழித்து வருவதாக வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

கால்நடைகளின் தொல்லையால் தமது பொருள்கள் சேதமடைவதாகவும் இதனால் தாம் வியாபாரத்தில் இழப்பை எதிர்கொள்வதாகவும் சந்தை வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வியாபாரிகள் பல தடவைகள் ஊர்காவற்துறை பிரதேச சபைக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்தனர். ஊர்காவற்துறை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எ.லக்ஸ்மனால் அண்மையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டும் இன்றுவரை இப்பிரச்சினை தொடர்பாக பிரதேச சபை நடவடிக்கை. எடுக்காமல் அசமந்தப்போக்குடன் செயற்பட்டு வருகின்றது என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கைவிடுத்தனர். இது தொடர்பில் ஊர்காவற்துறை பிரதேச சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இன்று திங்கட்கிழமை தொடக்கம் அதனை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

சந்தை வளாகத்தில் காணப்படும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிக்கப்படும் எனவும் கால்நடைகளின் உரிமையாளர்கள் வந்துபெற்றுக் கொள்ளும் போது இவ்வாறாக தவறு ஏற்பட இடமளிக்கமாட்டோம் என அவர்களிடமிருந்து கடிதம் பெறப்படும் . அத்துடன் பிடிக்கப்பட்ட காலத்தில் இருந்து கால்நடைகளின் பராமரிப்புச் செலவும் அவர்களிடமிருந்து பெறப்படும். திரும்பவும் இதேபோன்று அந்தக் கால்நடைகள் சந்தை வளாகத்தில் வருமாக இருந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-154)



## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

கொடிகாமம், ஜூலை 8

வரணி, நாவற்காடு கரம்பை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் வாணி முன்பள்ளி ஆகியவற்றின் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சிவன் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறுவுநர் கணேஷ் வேலாயுதத்தால் இந்த உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

கரம்பை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்குப் பல்லூடகக் கற்கைகளுக்கான உபகரணங்களும், வாணி முன்பள்ளிக்கு நவீன தொலைக்காட்சியும் வழங்கப்பட்டன. (ஐ-159)

## வெங்காய கொட்டகை அமைக்க விவசாயிகளுக்கு மானியம்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

விவசாயிகளுக்கு வெங்காயக் கொட்டகை அமைப்பதற்கான மானியம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் செயலகத்தால் நடைமுறை படுத்தப்படும் "தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டம்" மூலமாக இந்த மானியம் வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் சிவசிறி தலைமையில், செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட 124 விவசாயப் பயனாளிகளுக்கு வெங்காயக்கொட்டகை அமைப்பதற்காக 50 சதவீத மானிய அடிப்படையில் 57 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன . நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் விவசாயிகளிடம் இவை கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார், வலிதெற்கு பிரதேச சபை உறுப்பினர் தவராஜா துவாரகன், வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர் அனுசாவதி, காங்கேசன் துறைத் தொகுதி அமைப்பாளர் திருஞானம் ஞானசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)





பா. றமணாகரனின் 'போதையை ஒழியடா' குறும்பட அறிமுக நிகழ்வு வலிகாமம் பண்டத்தரிப்பு, காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (து)

## கடலில் தத்தளித்தோரை காப்பாற்றியது கடற்படை

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் அனலைதீவுக் கடலில் தத்தளித்த 10 பேர் காப்பாற்றப்பட்டு கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

ஊர்காவற்துறை கரம்பொனிலிருந்து அனலைதீவுக்கு நேற்றுமுன்தினம் படகில் பயணம் செய்த வேளையே இந்தப் பத்துப்பேரும் ஆபத்தில் சிக்கியுள்ளனர். இவர்கள் பயணம்செய்த படகின் கயிறு இயந்திரத்தின் புறப்ளருடன் சிக்கியதால் படகு நகரமுடியாமல் தத்தளித்துள்ளது.

கடற்படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு கடற்படையின் படகு மற்றுமொரு டிங்கி படகுடன் சென்று ஆபத்தில் சிக்கியிருந்த பயணிகள் எண்மர் மற்றும் படகு உரிமையாளர்கள் இருவர் எனப் பத்துப்பேரை மீட்டுப் பத்திரமாக கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர் என்று கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன. (எ-21)

## மாமரச் செய்கையாளருக்கு தண்ணீர் பம்பி கையளிப்பு

கொடிகாமம், ஜூலை 8

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக மாமரச் செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்குத் தண்ணீர்ப் பம்பிகள் வழங்கப்பட்டன.

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக திட்ட அலுவலர்களின் ஏற்பாட்டில் தென்மராட்சி மீசாலை பழமுதிர்ச் சோலை வளாகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இவை வழங்கப்பட்டன.

விடத்தற்பளை, எழுதுமட்டுவாழ், மீசாலை ஆகிய கிராமங்களில் மாமரச் செய்கையை மேம்படுத்தும் பொருட்டு மாமரச் செய்கையாளர் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் சங்கத் தலைவர்கள் செயலர், பொருளாளர் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர். (து-159)







கொமர்சல் வங்கியின் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கின் பரிசளிப்பு விழா யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் மூத்த முகாமையாளர் அ.ஜெயபாலன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக் கல்விப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் சற்குணராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் பரமேஸ்வரனும் மற்றும் டேமியன் அடிகளாரும் கலந்து கொண்டனர். 30 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஒ.5)



## சான்றிதழ் வழங்கலும் மதிப்பளிப்பும்

கொடிகாமம், ஜூலை 8

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் உறுப்பினர்களுக்கான மதிப்பளிப்பும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழாவில் கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலயம், விசுவமடு மகா வித்தியாலயம், தர்மபுரம் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபை உறுப்பினர்களாகச் செயற்பட்டு முதலுதவி, வீதி ஒழுங்கு, பாதுகாப்பு, ஒழுங்கமைப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அதற்காக அவர்கள் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். பிரமந்தனாறு மகா வித்தியாலய அதிபர் கே. தெய்வராசா, மகளிர் பிரிவுப் பொறுப் பாளர் திருமதி. ச. கேதீஸ்வரி மற்றும் ஆணையாளர்களான வை.மோகனதாஸ், வை. ஜெகதாஸ் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர். (து-159)

## நவாலியில் நாளை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் நவாலி தெற்கு மதியொளி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30.மணிக்கு மானிப்பாய் சங்கத் தலைவர் இ.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விருந்தினராக வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர். அ.ஜெபநேசன், வலிகாமம்பனைதென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பொது முகாமையாளர் க.சுதாகரன் ஆகியோர் கலந்துகொள்வர். (து-63)

# பிள்ளைகள் பார்க்கும் வகையில் பெற்றோரே சண்டையிடாதீர்கள்!

*பிள்ளைகளின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும் வைத்தியர் அருந்ததி அறிவுரை*

*கொடிகாமம், ஜூலை 8*

*பிள்ளைகளுக்கு முன்னால் பெற்றோர்கள் சண்டை பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும். சண்டை பிடித்தால் பிள்ளைகளின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும். பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். பிள்ளைகள் இல்லாத நேரத்தில் அல்லது பிள்ளைகள் நித்திரையான நேரத்தில் நீங்கள் உங்கள் பிரச்சினைகளைக் கதைத்துப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.*

இவ்வாறு சித்தமருத்துவத்துறை வைத்தியர் திருமதி அருந்ததி சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

தென்மராட்சி நாவற்குழி சித்தி விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம்நிகழ்வு நேற்று முன்தினம் முன்பள்ளி ஆசிரியர் திருமதி கமலேந்திரன் சர்மிளா தலைமையில் நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக்கலந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு வீட்டிலும் தாய்மார் ஒரு பிள்ளையை வளர்க்க எவ்வளவோ சிரமப்படுகிறார்கள். 5வயதுக்கு உட்பட்ட இரண்டு பிள்ளைகளை எவ்வளவோ சிரமத்தில் வளர்க்கின்றனர்.

முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுமை போற்றுதற்குரியது. ஒவ்வொரு பிள்ளைகளையும் பொறுமையாகக் கவனித்து கல்வி கற்பித்து நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளைகளின் பெற்றோரும் கட்டாயமாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்புவழங்கவேண்டும். உதவி செய்யாதபோது அந்த ஆசிரியர்களால் மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வரமுடியாது. நீங்கள் எவ்வளவு தூரம் உதவிசெய்கிறீர்களோ அந்தளவுக்கு பிள்ளைகளை முன்னேற்ற முடியும்.



பிள்ளைகளை ஒழுக்கத்திலும் கல்வியிலும் நல்ல நிலைக்குகொண்டுவரமுடியும். அந்த முன்பள்ளியும் திறமையாகச் செயற்பட்டுக் கொண்டுவரும். ஒவ்வொரு பெற்றோரும் எங்களுடைய பிள்ளைகள் எங்கள் முன்பள்ளி என்று எடுத்துக் கொண்டால் கட்டாயம் ஊருக்குள்ளேயே நல்ல நிலைக்கு வருவார்கள்.

பிள்ளைகளை வளர்ப்பதில் அம்மாஅப்பாவுக்குமுக்கிய பொறுப்பு உண்டு. ஒவ்வொரு குடும்பத்திலும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்றால் முறைப்படி காலையில் சந்தோசமாக எழுந்திருங்கள். உங்கள் குழந்தைகளை எவ்வளவு சந்தோசமாக எழுப்புகிறீர்களோ அன்றைக்கு உங்கள் வாழ்க்கை சந்தோசமாக போகும். குழந்தைகளைச் சந்தோசமாக எழுப்பாமல் அடித்து சத்தமிட்டு எழுப்பினால்பிள்ளைஅழத் தொடங்கும். அப்போது உங்கள் எல்லோர் மனநிலையும் மாறும். எழுப்பும் போதே அன்பாக சந்தோசமாக எழுப்புங்கள்.

குழந்தைகளைக் குழப்பமில்லாமல் எழுப்புங்கள். எழும்பும் போது நீங்கள் கெட்டிக்காரப்பிள்ளை, நீங்கள் அதிர்ஷ்டசாலி என்று ஒவ்வொருபிள்ளையையும் உங்கள்கண்ணால்பாருங்கள். காணும் நேரம் எல்லாம் பெற்றோர்கள் நம்ப வேண்டும். ஒவ்வொருபிள்ளையையும் கவனமாகப் பாருங்கள். பிள்ளைகளைத் திட்டாதீர்கள். ஒரு நாளும் பிள்ளைகளைத் திட்டக் கூடாது. மிகவும் சந்தோசமாகப் பார்க்க வேண்டும்.

அம்மாஅப்பாசந்தோசமாக இருக்கிறார்கள் என்று பிள்ளைகள்சந்தோசமாகஇருப்பார்கள். எவ்வளவு தூரம் சந்தோசமாக இருக்கிறார்களோ அந்தளவுக்குமூளை வளர்ச்சிஅடையும். கெட்டித்தனம் இருக்கும். அறிவு கிடைக்கும். எனதுபிள்ளை கெட்டிக்காரப்பிள்ளைதான் என்று ஒவ்வொரு நாளும் சந்தோசமாக எழுப்புங்கள் உங்கள்பிள்ளைகளைநீங்கள் நம்புங்கள் என்று கூறினார். மதிப்புறு விருந்தினர்களாக சித்திவிநாயகர் சனசமூக நிலைய முன்னாள் தலைவர் செ. குமாரசாமி, தென்மராட்சி வலய முன்பள்ளிகளின்இணைப்பாளர் ரமேஸ்தர்மிலா, நாவற்குழி குடும்ப முன்பள்ளிகளின் இணைப்பாளர்திருமதிவிஜயகுமார் சயந்தா நிகழ்வுகளின் தொகுப்பாளரும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப அலுவலருமானகோ. ஜீவபாலன், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (த-159)

## வளப்பற்றாக்குறைகளுடன் கொக்குத்தொடுவாய் ம.வி.

*நடவடிக்கைஎடுக்குமாறு கோரிக்கை*

முல்லைத்தீவு, ஜூலை 8

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்மகாவித்தியாலயத்தில்அதிபர்இல்லை. அத்துடன் கட்டடங்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது என்று கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் கிட்ணபிள்ளை சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவித்ததாவது பாடசாலை மாணவர்கள் சரியான முறையில் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் பலத்த இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்.

இந்தப் பாடசாலைக்கு கடந்த ஒன்றரை வருடங்களாக அதிபர் இல்லை. விஞ்ஞானம்மற்றும்ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர்களும்இல்லை. எனவே இந்த பாடங்களை கற்பதில் மாணவர்கள் மிகுந்தஇடர்பாடுகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த பாடசாலையில் நான்கு வகுப்புக்களுக்கு கட்டட வசதி இல்லாமையால், மாணவர்கள் மர நிழலில் இருந்து கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. உரியஅதிகாரிகள் இவ்விடயத்தினைக் கருத்தில் எடுத்து, பாடசாலையில் நிலவும் பற்றாக்குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு உரியநடவடிக்கைஎடுக்க வேண்டும். என்றார்.

இது தொடர்பில் முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா வுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அதிபர் நியமனம் தொடர்பாகக் கோரியிருக்கின்றோம். எனினும் யாரும் அதற்கு விண்ணப்பிக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் பாடசாலை அதிபருக்குரிய பரீட்சைகளில் தோற்றி சித்தி பெற்று விண்ணப்பித்தால் அவர்களைநியமிப்பதற்குஎண்ணியிருக்கின்றோம்.

கொக்குத்தொடுவாய்மகாவித்தியாலயத்தில், ஒரே ஒருவகுப்புமாணவர்கள் தான்தற்காலிகமாகவகுப்பறை கட்டடத்தில் கற்கின்றனர். அங்குமாணவர்கள் எவரும் மர நிழலில் கற்கும் நிலையில் இல்லை. அங்கு ஒரு விஞ்ஞான பாட ஆசிரியர் இருக்கின்றார். அந்தப்பாடசாலைக்கு அவரே போதுமானவர்.

அதேவேளை ஆரம்பப் பிரிவுக்குத்தான் ஆங்கில ஆசிரியர் இல்லை. குறிப்பாகஎமது வலயத்தில் பல பாடசாலையில் இந்த பற்றாக்குறைநிலவுகின்றது. எதிர் காலத்தில் இந்த பற்றாக்குறைகளையும்தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் -என்றார். (எ-246)

## தீர்வையற்ற சிகரெட் விற்றவர் கைது

சாவகச்சேரி, ஜூலை 8

தீர்வையற்றசிகரெட் விற்க முயன்றஇருவரைசாவகச்சேரிமதுவரிநிலையத்தினர் கைதுசெய்துவழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமைசாவகச்சேரி நகரப்பகுதியில் இடம்பெற்றது.

தமக்குக் கிடைத்த தகவலையடுத்து மதுவரி நிலையத்தினர் சிவில் உடையில் கண்காணித்தனர். வர்த்தகநிலையத்துக்குதீர்வையற்ற சிகரெட்டுகளை விற்பனை செய்தவரையும், அந்த சிகரெட் பைக்கற்றுக்களை வைத்திருந்தவரையும் மதுவரி நிலையத்தினர் கைது செய்ததுடன், நாளை மறுதினம் புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## முல்லையில் தனியார் காணிகளில் தொலைத் தொடர்புக் கோபுரங்கள்

*வாடகைப் பணம் படையினருக்கா?*

முல்லைத்தீவு, ஜூலை 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் காணிகள் பலவற்றிலும் தொலைத்தொடர்புக் கம்பங்கள் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய காணிகள் சிலவற்றை இராணுவத்தினர் பிடித்து வைத்துள்ள நிலையில், அதற்கான வாடகைப் பணத்தை தொலைத் தொடர்பு நிறுவனங்களிடமிருந்துஇராணுவத்தினர்பெற்றுக்கொள்கின்றனராஎன்று பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவுமாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்சுமார்50ஆயிரம்குடும்பங்கள் வாழ்கின்றன. பிரதேசசபைதெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் எதுவித அனுமதிகளும்இன்றிபடையினரின் முகாம்களிலும் மக்களின் காணிகளிலும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தொலைத்தொடர்புக்கோபுரங்களைஅமைத்து தொலைத்தொடர்பு சேவைகளை விஸ்தரித்துள்ளன.

படையினர் அபகரித்துள்ள தனியார்காணிகளிலும்இந்தக்கோபுரங்கள்அமைக்கப்பட்டுள்ளமையால் அதன் வாடகைப்பணம்காணிஉரிமையாளர்களுக்குக் கடந்த பத்து ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அவ்வாறெனின், தங்கள் காணிகளின் வாடகைப்பணத்தைப் படையினர் பெற்றுவருகின்றனரா? என்று பொதுமக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

தங்கள்காணிகளின்வளங்களை தாங்கள் பெறமுடியவில்லை, அனுபவிக்க முடியவில்லை. அதனைவிட தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைத்துள்ளார்கள்அதன்வாடகையையார் பெறுகின்றார்கள்?

புதுக்குடியிருப்பில் பிரதேச சபை உருவாக்கப்பட்டதன் பின்னர்இதுவரைஅதற்கான அனுமதி எதுவும் பெறப்படவில்லை என்று அறிந்துள்ளோம் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத்தவிசாளர்செ. பிறேமகாந்திடம் இது பற்றிக் கேட்டபோது, கடந்த ஆண்டுதான் பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு செயற்பட்டுவருகிறது. அமைக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்கள் தொடர்பில்உரியநிறுவனங்கள் அதற்கான அனுமதியைப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன என்று தெரிவித்தார். இவை பற்றி தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பதில் கிடைக்கவில்லை. (த-ரி3)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச காணிகளில் உள்ளோருக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை

*காணிச்சீர்திருத்த ஆணைக்குழு தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணத்தில் அரச காணிகளில் தங்கியுள்ளவர்களுக்குவாழ்வாதாரத்தைக்கருத்திற்கொண்டு காணிஉறுதிகள்வழங்கநடவடிக்கைஎடுத்துள்ளதாக பிராந்திய காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கில் போரின் பின்னர் மக்கள் பல்வேறு பகுதிகளில் குடியேறியுள்ளனர். அரச காணிகளின் எல்லைக் கற்கள் போர்க் காலத்தில் அழிவடைந்துவிட்டன. மக்கள் வாழ்வாதாரத்துக்காக அரச காணிகளில் வசித்து வருகின்றனர். இவர்களுக்குக் காணிப் பத்திரம் இல்லாமையால் பல்வேறு பிரச்சினைகளுக்குமுகம்கொடுத்துவருகின்றனர். விவசாய நிலமாக ஏக்கர் கணக்கில் மக்கள் பயிர் செய்து வருகின்றனர்.

அவர்களின் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு காணிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாகசாவகச்சேரிகரம்பகம்பிரதேசத்தில் உள்ள 110 ஏக்கர் காணி 65 பேருக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக அரை ஏக்கர் தொடக்கம் 2 ஏக்கர் வரை வழங்கப்படவுள்ளது. அளவீட்டுப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அவர்களுக்கான காணிப் பத்திரங்கள் விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

# "ஸ்மாட்" கோபுரத்துக்கு வலுக்கின்றது எதிர்ப்பு!

## நேற்றும் சிலர் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாண மாநகர சபையின் அனுமதியுடன் மாநகர சபையின் எல்லைக்குள் நடப்பட்டுவரும் "ஸ்மாட்" கோபுரங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருன்றது. நேற்றும் சிலர் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தக் கோபுரங்களில் 5 ஜி அலைக் கற்றைக் கருவிகள் பொருத்தப்படும் என்று பரப்படும் செய்திகளை அடுத்தே மக்கள் அந்தக் கோபுரத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். நேற்றும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடலைக்கு அண்மையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொதுச்சபைக் கூட்டத்தின் அனுமதியுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் 18 "ஸ்மாட்" கோபுரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்தக் கோபுரங்கள் தற்போது மக்கள் செறிந்து வாழும் இடங்களில் அமைக்கப்படுகின்றன. அவ்வாறு அமைக்கப்படும் கோபுரங்கள் 5 ஜி அலைக் கற்றைக் கருவிகள் பொருத்தவே அமைக்கப்படுகின்றன என்றும் அவ்வாறு 5ஜி அலைக் கற்றைகள் அந்த கோபுரத்தில் இருந்து வெளிவந்தால் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படும் என்றும் பரப்பப்பட்ட தகவல்களை அடுத்தே மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்னர்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களும் இந்த விடயம் பற்றியே பிரஸ்தாபித்திருந்தனர். எதிர்காலத்தில் பெரும் ஆபத்து ஏற்படுமென்று கருதியே எதிர்ப்பு வெளியிடுகின்றோம் என்று மக்கள் கூறுகின்றனர். இதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதவிடத்து மாநகர சபைக்கு எதிராக தொடர் போராட்டங்களை பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

இதேவேளை, கடந்த 29ஆம் திகதி யாழ்ப்பாணம் குருநகரில் இதேபோன்றதொரு ஆர்ப்பாட்டத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாண நகரத்தில் அமைக்கப்பட்டுவரும் 18 ஸ்மாட் கோபுரங்களில் சில தற்போது அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் கோபுரங்களுக்கான விளக்கங்கள், அதனுடைய பயன்கள் தொடர்பில் மாநகர சபையின் உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கப்பட்ட பின்னர் அதற்கான அனுமதியை யாழ்ப்பாண மாநகரசபை வழங்கியிருந்தது.

இலங்கையில் 5ஜி அலைக் கற்றைகள் நடைமுறையில் இல்லாதபோது யாழ்ப்பாண மாநகரசபையின் ஆளுகைக்குள் மாத்திரம் எப்படிக் கொண்டு வரமுடியும் என்றும், அரசியல் இலாபத்துக்காக மக்களை மாநகர சபைக்கு எதிராக திசை திருப்புவதற்காக ஒரு சிலர் இவ்வாறு கதைகளைப் பரப்பி மக்களைத் தூண்டிவிடுகின்றனர் என்றும் சிலர் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தற்போது 5ஜி அலைக்கற்றைகள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் அது வரலாம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் கூறுகின்றனர். (எ-21)



நாச்சிக்குடா கரடிகுன்று புனித தோமையார் ஆலயத் திருவிழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. மாதகல் பங்கின் புனித செபஸ்தியார் ஆலய முதல் புதிய குரு அருட்பணியாளர் அன்ரனிதாஸ் லியான்ஸ் அடிகளார் தலைமையில் பங்குத்தந்தை அருட்பணியாளர் சுமன், அருட்பணியாளர் யேசு பாலன் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். (எ-222)

# வீதிகள் சீரமைப்புத் தரமில்லையெனில் அடையாளம் காட்டுங்கள் ஆராய்கிறோம்

## வலி.தென்மேற்குத் தவிசாளர் மக்களிடம் கோரிக்கை

துரித கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் சீரமைக்கப்படும் வீதிகள் கண்காணிக்கப்படாது, உரிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தாது சீரமைக்கப்படுகின்றன என்றால், அவற்றை இனங்காட்டுங்கள். உரிய முறையில் சீரமைக்கப்படவில்லையெனில் நடவடிக்கை எடுக்கலாம்.

இவ்வாறு வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் துரித கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வீதி அபிவிருத்திகள் கண்காணிப்பு அலுவலர்கள் இல்லாமையால், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட உரிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தாது சீரமைக்கப்படுகின்றன என்றும், விரை வில் அந்த வீதிகள் மீண்டும் பழுதடைந்துவிடும் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச சபைக்குட்பட்டு 90 வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அந்த வீதிகளைக் கண்காணிக்க தொழில்நுட்ப அலுவலர்கள் களத்தில் உள்ளனர். இதுதவிர, ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்தவர்களும் அதற்காகப் பொறுப்பாக உள்ளனர். இவ்வளவு இருந்தும் எழுந்தமானமாகக் குறைகூறக்கூடாது. இது ஒட்டுமொத்த வீதிச் சீரமைப்பையும் குறைகூறு வதாகவே அமைகிறது. பாடுபட்டு தமது வேலைகளைத் திறம்படச் செய்யும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒரு பகுதியில் இடம்பெறும் சீரமைப்பைக் கண்காணிக்க இன்னொரு பகுதியைச் சேர்ந்தவர்களை ஈடுபடுத்த முடியாது பிழை நடந்திருக்கலாம். அவ்வாறு நடந்திருந்தால் அது எந்த வீதி? என்ன பிரச்சினை? என்பதை அறியத்தாருங்கள். உரிய நடவடிக்கை எடுக்கமுடியும் - என்றார். (து-21,115)




# கேற்வே லயன் கழக புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் நுழைவாயில் (கேற்வே) லயன்ஸ் கழகத்தின் 2019/2020 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகத் தெரிவு கடந்த 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கழகத்தின் தலைவராக லயன் செ.சத்தியபவனும், செயலாளராக லயன் ஜெ.சந்தியேந்திரானும், பொருளாளராக லயன் பி.திருச்செல்வனும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக 306பி1 மாவட்ட இரண்டாவது உப ஆளுநர் லயன் ஆர்.எல். ராஜ்குமார் கலந்துகொண்டார். (எ)

# திட்டமிட்ட வளச் சுரண்டல்களால் இன இருப்புக்குப் பெரும் ஆபத்து

## இயற்கைக்கு மாறான செயற்பாடுகளை நிறுத்துமாறும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்க தேசிய மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

தமிழர் தாயகப்பகுதியில் திட்டமிட்டமுறையில் இயற்கை வளம் அபகரிக்கப்படுகிறது. காடுகள் அழிக்கப்படுகின்றன. கனியவளங்கள் சுரண்டப்ப டுகின்றன. இவை எமது வாழ்வையும் இருப்பையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. இவை எதிர்காலத்தில் இயற்கைப் பேரிடர்கள் தமிழர் தாயகத்தில் ஏற்பட வாய்ப்பளித்துவிடும். இயற்கைக்கு மாறான சட்டவிரோத செயற்பாடுகளை உடனடியாகநிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுவதுடன் காடு வளர்ப்பிலும் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின்தேசியமாநாட்டில்வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய அரசியலில் சூழலியம் என்ற கோட்பாட்டை உள்வாங்கிப் புதியதோர் அரசியல் கட்சியாகப் பரிணாமித்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன், சிறப்புப் பேச்சாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறை தலைவர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். ஏராளமானோர் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் ஒன்பது தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட் டுள்ளன என்று ஐங்கரநேசனின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 8 தீர்மானங்களும் வருமாறு:

1. தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய இணைந்த வடக்கு - கிழக்கில் சுயாட்சிக் கட்டமைப்புடன் கூடிய மீளப் பெற முடியாத அதிகாரப் பகிர்வே தமிழ் மக்களின் நீண்ட கால இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.
2. வடக்கு - கிழக்கு நிரந்தர மாக இணைக்க 13 ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் இந்தியா, இலங்கை அரசுடன் பேச வேண்டும். காலத்துக்கு காலம் பல ஆணைக் குழுக்களை நிறுவி பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றும் வேலையை இலங்கை நிறுத்த வேண்டும். உண்மையைக் கண்டறிய பன்னாட்டுச் சுயாதீன ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும்.
3. வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்திச் சபை, புத்தசாசனத்தைப் பாதுகாக்கும் கட்டமைப்புகளும் உல்லாசப் பயணத் துறைக்குப் பொறுப்பான அமைப்புக்கள் தமிழரின் தாயகத்தை விழுங்கி வருகின்றன. இவ்வாறு வேறு வழிகளில்போரைத் தொடர்வது நிறுத்தப்பட வேண்டும்.
4. காணாமல் போனோருக்கான அலுவலகமும் ஏமாற்றுவித்தையாக. 6 ஆயிரம் ரூபா பணம்கொடுக்க முனைவது போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும். 30/1 தீர்மானம் நடைமுறைக்கு வரவேண்டும். அரசு உண்மையைக் வெளிக்கொணர்ந்து பரிகாரம் தேட வேண்டும்.
5. சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள் விரைவாக விடுவிக்கப்படவேண்டும்.
6. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும்.
7. இனப் பிரச்சினைக்காக பொருத்தமான தீர்வைப் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஒரு குடையின் கீழ் இணையவேண்டும்.
8. பசுமைத் தாயகத்தைப் பாதுகாப்பதற்கான தன்னாட்சி அதிகாரங்களைப் பெறுவதற்காகப் போராடும் அனைத்துத் தரப்புகளோடும் நாம் விசுவாசமாக இணைந்து செயற்படுவோம்.


(த)

# ஆனைவிழுந்தானில் தண்ணீர்த் தட்டுப்பாடு

## குடிதண்ணீர் இன்றி மக்கள் பெரும் திண்டாட்டம்

கிளிநொச்சி, ஜூலை8

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பிரதேச மக்கள் குடி தண்ணீர் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது வடக்கில் வறட்சியான காலநிலை நிலவி வருகின்றனது. அதனால் பல இடங்களில் மக்கள் குடி தண்ணீர் இன்றி அல்லாடி வருகின்றனர்.



ஆனைவிழுந்தான் பிரதேச மக்களும் குடி தண்ணீர் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அந்தப் பகுதியில் குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றபோதும், சில இடங்களுக்கு அந்தக் குடி தண்ணீர் வழங்கல் இடம்பெறுவதில்லை என்று கூறப்படுகின்றது.

அந்தப் பகுதிகளுக்கு இராணுவத்தினரால் குடி தண்ணீர் வழங்கப்படுகின்றபோதும், அது பற்றாக்குறையாக உள்ளது என்றும், அந்தப் பகுதியில் உள்ள நீர்க் குழாய்கள் சேதமடைந்துள்ளன என்றும் மக்கள் கூறுகின்றனர்.

தமது குடி தண்ணீர்த் தேவையை நிறைவு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)

## அலகரை சிறிமுருகனுக்கு மணிக்கோபுரம் அமைப்பு


முல்லைத்தீவு, ஜூலை 8

ஒட்சுட்டான் புளியங்குளம் அலகரை சிறிமுருகன் ஆலயம் சீரமைக்கப்பட்டு மணிக்கோபுரம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

புளியங்குளத்தைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான ஆறுமுகம் பரமநாதன் குடும்பத்தின் நிதிப் பங்களிப்பில் கோவில் சீரமைக்கப்பட்டு மணிக்கோபுரம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தக் கோவில் போரின் போது பாதிக்கப்பட்டது.

போரால் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 2012ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப் பட்டனர். மக்கள் வழிபட்டு வந்தநிலையில், 2017 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றிருந்தது. நிதி வழங்கிய பரமநாதன் மணிக்கோபுரத்தைத் திறந்து வைத்தார். (து-ரி3)



## கரைச்சி பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

கிளிநொச்சி, ஜூலை 8

கரைச்சி பிரதேச சபைக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேச சபையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் தெரிவான உறுப்பினர் ஒருவர் சுயவிருப்பின் பேரில் பதவி விலகியுள்ள நிலையில் வெற்றிடத்துக்கான புதிய உறுப்பினர் ஒருவர் அக்கட்சியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரைச்சி பிரதேச சபையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் புவிதரன் தனது சுய விருப்பின் பேரில் பதவி விலகியுள்ளார். இந்த நிலையில் அந்த இடத்துக்கு அம்பாள்குளத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற கிராம அலுவலர் கந்தையா தர்மலிங்கம் நியமிக்கபப்பட்டுள்ளார்.

அவர் இன்று இடம்பெறவுள்ள சபை அமர்வில் கலந்துகொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான ஏற்பாடுகள் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## வெடிப்பொருள்கள் சில கேப்பாப்பிலவில் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 8

முல்லைத்தீவு, கேப்பாபிலவில் கைவிடப்பட்ட வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை கேப்பாபிலவு படைத் தலைமையகத்துக்கு அருகில் உள்ள பிரம்படி வயல் பிரதேசத்தில் பெரும் குண்டு வெடிப்பு நடந்தது. அதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸாரும், படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நந்திக்கடல் பகுதியில் ஏ.கே.81 ரகத் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது. அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டப் படைத் தலைமையகத்துக்கு முன்பாக உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணி ஒன்றுக்குள் இருந்து எறிகணை கண்டுபிடிக்கப்பட்டது.

காணியின் உரிமையாளர்கள் அண்மையில் கிணறு வெட்டியபோது அங்கு அந்த எறிகணைக் காணப்படவில்லை என்று கூறப்படுகின்றது. அந்தப் பகுதியிலேயே கேப்பாபிலவு நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று கோரி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். (எ-ரி3)

## வாக்காளர் விண்ணப்ப படிவங்கள் வீதிகளில்!



வவுனியா, ஜூலை 8

வாக்காளர் விண்ணப்பப்படிவங்கள் சேதமாக்கப்பட்டு வீதிகளில் வீசப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

வவுனியா சூடுவெந்தபிலவு பள்ளிவாசலுக்கு அருகே வன்னித் தேர்தல் தொகுதிக்கான வாக்காளர் படிவங்கள் நேற்று முன்தினம் சிறு சிறு துண்டுகளாகக் காணப்பட்டன.

வாக்களர் விண்ணப்பப்படிவங்கள் நிரப்பபட்ட நிலையில் சேதமடைந்து வீசப்பட்டுள்ளன.

கிராம அலுவலரினால் வீடுகளுக்கு வழங்கப்பட்டு நிரப்பி எடுத்துச் செல்லப்பட்ட வாக்காளர் விண்ணப்பப்படிவம் எவ்வாறு பொதுமக்கள் பயணம் மேற்கொள்ளும் வீதியில் வீசப்பட்டுள்ளது என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஐ)

## நொச்சிமோட்டை வித்தியாலய சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பும்

வவுனியா, ஜூலை 8

வவுனியா நொச்சிமோட்டை இளநிலை உயர்தர வித்தியாலயத்தின் 'வித்துவம்' சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பும் கடந்த வாரம் நடைபெற்றது.

படசாலை அதிபர் கோ.குலேந்திரகுமார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி, விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு மட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அவற்றை விருந்தினர்கள் வழங்கினர்.

தொடர்ந்து பாடசாலை ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

1939ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு பல ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இந்தப் பாடசாலையின் முதலாவது சஞ்சிகையாக வித்துவம் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.கனீபா அதனை வெளியிட்டார். நிகழ்வில் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளை மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (து)







## சிறப்பு கருத்தரங்கு

கிளிநொச்சி, ஜூலை 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தால் தரம் 5 புலமைப் பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு கிளிநொச்சி வளாகத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

பொறியியல் பீட பீடாதிபதி அற்புதராஜா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பேராசிரியர் அலெக்ஸ் தேவரஞ்சன் கலந்துகொண்டிருந்தார்.

வடமாகாண கல்வி அமைச்சுடன் இணைந்து கிளிநாச்சி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் இரு நாள்கள் செயலமர்வாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

முதல் நாளில் அண்ணளவாக 600 மாணவர்களும் 300 பெற்றோர்களும் கலந்துகொண்டனர். (ஐ-6)

## சாரதிகளுக்கு தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 8

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றால் தலா 3 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு எதிரான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தலைக்கவசம் அணியாது சென்ற நபருக்கும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் பிறேக், லைற் இல்லாது சென்ற நபருக்கும் தலா 3 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது.


இதேவேளை காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய வேறு இருவருக்கு எதிராக கிளிநொச்சிப் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-6)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்: கைரேகையால் மாட்டினார் ராஜபக்ச

கொழும்பு, ஜூலை 8

ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த விசாரணைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்படவுள்ளார் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் தெரிவித்துள்ளது.



தாக்குதல் நடந்த நாளில் தென்னக்கோனின் வாகனத்தில் கிடைத்த கைரேகை, தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் இராணுவ அதிகாரியான லலித் ராஜபக்சவின் கைரேகையுடன் ஒத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக, சட்டமா அதிபரின் இணைப்புச் செயலர் சிஷார ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

உபாலி தென்னக்கோனின் வாகனத்தில் அவரது கைரேகை எப்படி பதிவானது என்று சந்தேக நபர் எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இராணுவ அதிகாரி லலித் ராஜபக்சவை கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு சட்டமா அதிபர், டப்புல டி லிவேரா, குற்ற விசாரணைப் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும், சிஷார ஜெயரத்ன கூறினார்.

2009ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி உபாலி தென்னக்கோன் இனம்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தில் அவரும், அவரது மனைவியும் காயமடைந்தனர்.

லலித் ராஜபக்ச, சர்ச்சைக்குரிய திரிப்பொலி முகாமில் இருந்த ஒரு இராணுவ அதிகாரி என்று கூறப்படு கிறது. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை, ஊடகவியலாளர்கள் கீத் நொயார், நாமல் பெரேரா ஆகியோர் தாக்கப்பட்ட சம்பவங்களுடன், திரிப்பொலி இராணுவ முகாமில் இருந்த இராணுவ புலனாய்வு பிரிவினர் சம்பந்தப்பட்டிருந்தனர் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை அரசியலுக்கு பயன்படுத்தவில்லை

### முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களிடம் கூறினார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஜூலை 8

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நாம் ஒருபோதும் அரசியல் இலாபம் தேடுவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தவில்லை. முஸ்லிம் வியாபாரிகளையும் அவர்களது வியாபார நிலையங்களையும் புறக்கணிக்குமாறும் நாம் எந்த சந்தர்ப்பத்திலும் கோரவில்லை. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கைக்கான முஸ்லிம் நாட்டுத் தூதுவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று அப்பாவிப் பொது மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான பயங்கரவாதத் தாக்குதல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை. சில அடிப்படைவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட இந்த தாக்குதல்களால் இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். பயங்கரவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் தாக்குதல்களால் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் பயங்கரவாதிகளாகக் கருத முடியாது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நாம் ஒருபோதும் அரசியல் இலாபம் தேடுவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தவில்லை. முஸ்லிம் வியாபாரிகளையும் அவர்களது வியாபார நிலையங்களையும் புறக்கணிக்குமாறும் நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கோரவில்லை. பெரும்பாலான முஸ்லிம் வர்த்தக நிலையங்களில் தமிழ் மற்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் தொழில் செய்கின்றனர். முஸ்லிம் வியாபார நிலையங்கள் மூடப்பட்டால் அவர்கள் அனைவருக்கும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போகும்.

எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாம் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கான உரிமைகளை பாதுகாப்பதோடு அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம். மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வழங்கியுள்ள ஒத்துழைப்பு, ஆதரவு என்பவற்றை நினைவில் கொண்டு செயற்படுவோம்.

முப்பது ஆண்டுகாலப் போர் நிறைவடைந்த பின்னர் இலங்கையின் அபிவிருத்திக்கு மத்திய கிழக்கு நாடுகள் பல்வேறு வகையிலும் உதவிகளை வழங்கியுள்ளன. அதே போன்று முஸ்லிம் மக்களும் நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டுள்ளனர். இவர்கள் மத்தியில் காணப்படும் அச்சத்தைப் போக்கி அவர்களை இயல்பு நிலைக்கு திரும்பச்செய்வதே எமது நோக்கமாகும்- என்றார். (ஒ.5.61)

## அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் போவதில்லை

### பூடகமாகக் கூறினார் மைத்திரிபால

கொழும்பு, ஜூலை 8

நாட்டின் சுயாதீனத்துக்குச் சவாலாக அமையும் எந்தவொரு வெளிநாட்டு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிளவுபடுவதனூடாக ஒட்டுமொத்த நாடும் சிதைவடைந்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார். பிபிலை பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' மொனராகலை மாவட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு இறுதிநாள்நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சோபா மற்றும் மிலேனியம் சலஞ் உள்ளிட்ட ஒப்பந்தங்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பவையாகவே உள்ளன. இவ்வாறான ஒப்பந்தங்கள் நாட்டுக்குப் பொருந்தாத காணிச் சட்டங்கள் தொடர்பில் சமூகத்தில் பல்வேறு தரப்புக்கள் கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. அந்தக் கருத்துக்கள் உண்மையானவையோ இல்லையோ, ஆனால் நாட்டை பாதிக்கும் நாட்டுக்கு பொருந்தாத எந்தவொரு ஒப்பந்தத்துக்கும் நான் ஒருபோதும் உடன்படப் போவதில்லை.

தேசத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் போதைப் பொருள் கடத்தலை இல்லாதொழிப்பதற்கு நான் தலைமைதாங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், சில அதிகாரமிக்க அரசியல்வாதிகளும் அரசஅதிகாரிகளும்போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் காப்பாற்றுவதற்கு முன்வந்திருக்கின்றனர்.

அத்தகைய செயற்பாடுகளின் பிரதிபலன்களை அப்பாவிக் குழந்தைகளே அனுபவிக்க நேரிடும்.

போதைப்பொருள் கட்டத்தல்காரர்களுக்கு எதிராக என்னால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் அனைவரும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் அவர்களால் வழங்கப்படும் பணத்துக்காகவும் செயற்படும் நபர்களாவர்.

போதைப்பொருள் கடத்தல் காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது. போதைப்பொருள் அச்சுறுத்தல் விஸ்வரூபம் எடுப்பதற்கான ஒரே காரணம் இதுவரை ஆட்சியமைத்த எந்தவொரு அரசும் அரசியல் தேவைகளின் பொருட்டு போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தாமையேயாகும். போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக முன்னெடுத்தி ருக்கும் செயற்பாடுகளால் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

நாட்டின் பொதுவான கொள்கைகளுக்கு அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒன்றுபட வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிளவுபடுவதனூடாக ஒட்டுமொத்த நாடும் சிதைவடைந்துவிடும்- என்றார். (ஒ.5.61)

## இலங்கையில் ஆசிய கரையோர பொலிஸ் தலைவர்களின் கூட்டம்

கொழும்பு, ஜூலை 8

ஆசிய கரையோர பொலிஸ் அமைப்புகளின் தலைவர்களின் 15ஆவது, கூட்டம் கொழும்பில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. இன்று ஆரம்பமாகும் இந்தக் கூட்டம், 11ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறும். இலங்கையில் முதல்முறையாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக கரையோரப் பொலிஸ் படை தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆசியாவில் உள்ள 22 உறுப்பு நாடுகள், பிராந்தியங்களின் பிரதிநிதிகள் மற்றும் கண்காணிப்பாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், உயர்மட்ட கொள்கை சார் விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. (ஒ.5)

## பரிசை உதாசீனம் செய்தால் விளைவு மோசமாக இருக்கும்

### இலங்கையை மிரட்டுகிறது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 8

மிலேனியம் என்பது இலங்கை மக்களுக்கு அமெரிக்க மக்கள் வழங்கும் பரிசு என்று அமெரிக்க தூதரகம் தனது கீச்சகப் பதிவில் குறிப்பிட்டுள்ளது. மிலேனியம் உடன்படிக்கை குறித்து போலியான தகவல்கள் தற்போது பரப்பப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மிலேனியம் உடன்படிக்கை குறித்து ஜனநாயக ரீதியில் செயற்படாவிடின், பின் விளைவுகளை அனுபவிக்க நேரிடும் என்று அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குறித்த உடன்படிக்கை தொடர்பாக தென்னிலங்கை பத்திரிகை ஒன்றிற்கு கருத்து வெளியிடும்போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

மிலேனியம் உடன்படிக்கை ஊடாக, காணி உரிமை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தனியார் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள அரச காணிகளுக்கான வாடகையைப் பெற்று அரசின் வருமானத்தை உயர்த்தும் இயலுமை காணப்படுவதாக தூதரக அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

உடன்படிக்கையின் ஊடாக இலங்கையின் காணிகளை கையகப்படுத்துவதற்கு அமெரிக்கா தயாராவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையில்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். காணி குறித்து ஆராயும் மற்றும் நிர்வகிக்கும் இயலுமை இலங்கை அரசுக்குள்ளது எனவும் அமெரிக்க தூதரக அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# இலங்கையின் இறைமைக்கு ஒப்பந்தத்தால் ஆபத்து வராது!

### அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஒப்பந்தங்களால், இலங்கையின் இறையாண்மைக்கு எந்தப் பாதிப்புகளும் ஏற்படாது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலேனா டெப்ளிஸ் தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இலங்கையில், அமெரிக்க இராணுவ முகாம்களை அமைப்பதற்கான எந்த எதிர்பார்ப்பும் கிடையாது. இலங்கை அரசின் அழைப்பின் பேரில் மாத்திரம், பயிற்சி, இடர் பதிலளிப்பு போன்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் இணங்கிச் செயற்படுவது அமெரிக்காவின் எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் கூறினார். (ஒ.5)

# சு.க. உறுப்பினர்கள் பலர் முல்லையில் கட்சி தாவல்

முல்லைத்தீவு, ஜூலை 8
முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைப்பாளர் நா.அருணாதிலகன் உட்படப் பல உறுப்பினர்கள் நேற்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பிரபா கணேசனின் மக்கள் சந்திப்பு ஒன்று நேற்று முல்லைத்தீவு முள்ளியவளை மாமூலைகிராம பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. அதன்போதே பலர் கட்சி மாறியுள்ளனர்.

இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் மாவட்ட அமைப்பாளர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லிம்களின் ஆதிக்கம் கூடுதலாக உள்ளது. சிறிலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளராக இருந்து செயற்பட்டேன். எங்களுக்கு எதையும் வழங்குவதற்கு கட்சியின் தலைமைத்துவம் உட்பட பலர் தயங்குகின்றார்கள். அதற்கு காரணம் நாடாளுமன்ற உறுப்பினர் காதர்மஸ்தான் அவர்களின் தலையீடு. முஸ்லிம்களுக்கு கிழக்கு மாகாணம் தாரைவார்க்கப்பட்டு விட்டது. அதேபோல் வன்னி மாவட்டத்தையும் முஸ்லிம் மயமாக்க முயற்சிக்கின் றார்கள்.

குறிப்பாக முல்லைத்தீவை முஸ்லிம் பிரதேசமாக அறிவிக்க முனைகின்றார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தை முஸ்லிம்களில் இருந்து மீட்டெடுத்து தமிழ் தலைமையின் கீழ் அரசியலை கொண்டுசெல்ல வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம். அதற்காகவே ஜனநாயக மக்கள் காங்கிஸுடன் இணைந்து மாவட்டத்தின் அபிவிருத்தி யை முன்னெடுக்கவுள்ளோம்- என்றார். (எ-ரி3)

# மல்வத்து ஓயாத் திட்டத்தின் கீழ் இரகசிய குடியேற்ற முயற்சியா?

## கேள்வி எழுப்புகின்றார் வட மாகாண முன்னாள் உறுப்பினர் சத்தியலிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மல்வத்துஓயா திட்டத்தின் கீழ் வடக்கில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்கு தண்ணீர் என்று தெரிவித்து ஆரம்பிக்கும் திட்டத்தின் மூலம் ஓர் இரகசிய சிங்களக் குடியேற்றத்துக்கு வழி ஏற்படுத்தப்படுகின்றது என்ற வவுனியா மாவட்ட மக்கள் கூறும் குற்றச்சாட்டில் உண்மை ஒளிந்துள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

அநுராதபுரம் மாவட்டம் வரையில் வரும் மல்வத் ஓயா நீரை வவுனியா ஊடாக மன்னார் மாவட்டத்தின் மிகப் பெரும் குளமான கட்டுக்கரை வரை கொண்டு சென்று அதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் வயல்களுக்கு மேலதிகமாக நீர் வழங்குவதே திட்டத்தின் முக்கிய நோக்கமாக கூறப்பட்டது

இந்தத் திட்டமானது 11 ஆயிரத்து 375 மில்லியன் ரூபாவில் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் மின் உற்பத்தி, விவசாயத்துக்கான நீர் வழங்கல், குடிதண்ணீர் வழங்கல், நகர மயமாக்கல் என நான்கு முக்கிய இலக்கைக் கொண்டுதயாரிக்கப்பட்டுள்ளது என்று தற்போது கூறப்படுகின்றது. அதில் கட்டுக்கரை குளத்தின் கீழ் 9 ஆயிரத்தை தாண்டிய ஏக்கர் நிலமும் ஆட்காட்டி வெளியில் 2 ஆயிரத்தை தாண்டிய ஏக்கர் நிலத்துக்கும் தண்ணீர் பாச்ச முடியும் என்று கூறுகின்றனர்.

இதனால்சிலநன்மைகள்கிடைத்தாலும் இத் திட்டத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் எங்கும் சுட்டிக்காட்டப்படவில்லை. அந்த வகையில் இத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் தற்போது பட்டியலிடப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின்போது அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 6 சிறு குளங்களை ஒன்றாக இணைத்து பெரிய நீர்த் தேக்கம் உருவாக்கம் செய்யும் போது அதன் அருகே வாழும் 150 சிங்களக் குடும்பங்கள் இடம்பெயரும் சூழல் ஏற்படும்.

அவ்வாறு இடம்பெயரும் சிங்கள மக்களை வவுனியாவில் குடியமர்த்த முயற்சிகள் இடம்பெறுகின்றன. இதற்காக வவுனியா மாவட்டத்தில் உள்ள சிங்கள பிரதேச செயலர் பிரிவும் அன்றி சிங்கள மக்களே வாழாத கிராமங்களில் ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் கோரப்படுகின்றது.

இதற்காக வவுனியா மாவட்டத்தின் கப்பாச்சி கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ள முதலியார் குளத்திலேயே இந்த ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் கோரப்பட்ட சமயம் அதை வழங்க முடியாது எனவும் அதற்கு பதிலீடாக 330 ஏக்கர் நிலம் மட்டும் வழங்க முடியும் என வவுனியா மாவட்டத்தின் சார்பில் பதிலளிக்கப்பட்டது. தற்போது வவுனியாமாவட்டச்செயலாளரினதோ அல்லது செட்டிகுளம் பிரதேச செயலாரினதோ அனுமதி இன்றி அநுராதபுரம் நீர்ப்பாசனத் திணைக்களம் அந்த அனுமதியை வழங்கியுள்ளது. தற்போது நில அளவை செய்யப்படுகின்றது. இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட இடம் தமிழர்களின் பாரம்பரிய இடமான வெளவாலை எனப்படும் பகுதியாகும். மக்களுக்கு நிலத்தை வழங்க மறுத்த வனவளத் திணைக்களம் அநுராதபுரம் திணைக்களத்துக்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்த வெளவாலைப் பகுதி தமிழர்களின் பூர்வீக நிலம் அதனை விடுவிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் தரப்பில் நீண்டகாலம் கோரிக்கை விடுத்த நிலையில் அதனை மக்கள் பயன்பாட்டுக்கு வழங்க மறுத்த வனவளத் திணைக்களமானது இரகசியமான முறையில் நிலத்துக்கான அனுமதியை வழங்கியதன் அடிப்படையில் தற்போது பணியை ஆரம்பித்துள்ளமை மாவட்டத்தின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

தற்போது நீர்த் திட்டத்தின் பெயரிலும் நில அபகரிப்பு முயற்சி முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது - என்றார். (எ-105)

# கடலுக்கு சென்ற தமிழக மீனவர்கள் மூவர் மாயம்

சென்னை, ஜூலை 8
தமிழகம், பாம்பன் வடக்குக் கடற்கரையில் இருந்து மீன்பிடிக்கச்சென்ற நான்கு மீனவர்கள் நடுக்கடலில் படகுடன் காணாமல் போயுள்ளனர். மூன்றுநாள்களாகியும் அவர்கள் கரை திரும்பாததால் உறவினர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 60க்கும் குறைவான நாட்டு படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் மீன்பிடித்துவிட்டு வழக்கம் போல் மறுநாள் காலை கரை திரும்பிய நிலையில் ஸ்டீபன், அந்தோனி, வின்சன்ட், சின்தாஸ் உள்ளிட்ட நான்கு மீனவர்கள் கரை திரும்பவில்லை. கரை திரும்பாத மீனவர்களை மீன்துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று கடந்த இரண்டு நாள்களாக சக மீனவர்கள் தேடி வருகின்றனர்.

ஆனால் மாயமான மீனவர்கள் நிலை தொடர்பாக இதுவரை தகவல்கள் கிடைக்க வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடிக்கச் சென்று கரை திரும்பாத மீனவர்கள் குறித்து எந்தவித தகவலும் கிடைக்காததால் மீனவர்களின் உறவினர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

மூன்று நாள்களாக கரை திரும்பாத மீனவர்களை பத்திரமாக உயிரோடு மீட்டுத்தர மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவ சங்க அமைப்புகள் மற்றும் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)

## வருத்தப்படாத வாலிபர் சங்க மரநடுகை நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 8
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் கடந்த மூன்று நாள்களாக மரக்கன்றுகள் நடுகை மற்றும் மரக்கன்றுகள் விநியோகத்தில் ஈடுபட்டு நேற்று நிறைவு செய்தனர். இளவாலைக் கிராமத்தைச் சேர்ந்த அமரர் செ.து. சண்முகராசாவின் ஞாபகார்த்தமாக மரம் நடுகை மற்றும் மரக்கன்றுகள் வழங்கலில் ஈடுபட்டனர். இளவாலை மற்றும் அயற்கிரமங்களில் பொது இடங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகளில் மரம் நடுகை இடம்பெற்றன. 100க்கும் மேற்பட்டோருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (து-21)



## விசப் பாம்பை பயன்படுத்தி பெண்ணைக் கொல்ல முயற்சி

கொழும்பு, ஜூலை 8
கம்பகாவில் பெண்ணொருவரின் உடம்பில் விரியன் பாம்பை விட்டு தீண்டச்செய்து கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் மற்றொரு பெண்ணைக் கம்பகா பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், கொலை செய்ய முயற்சித்த பெண்ணின் கணவருடன் தவறான உறவில் இருந்து வந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி பாம்பாட்டி ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவை வழங்குவதாக உறுதியளித்து, விரியன் பாம்பு ஒன்றை கொண்டு வருமாறு கூறியுள்ளார். பெண்ணின் மீது இரண்டு முறை பாம்பை போட்டுள்ளதாக கூறப்படுகிறது. சம்பவத்தில் பெண்ணுக்கு எந்த பாதிப்பு ஏற்படாது அவர் தப்பித்துள்ளார்.

பாம்பாட்டியை கம்பகா பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து, நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொலை முயற்சிக்கு உள்ளான பெண்ணின் கணவரான 54 வயதான நபர் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அவரைக் கைது செய்து விசாரணை நடத்தி, அந்த நபருடன் தவறான உறவை வைத்திருந்தாரென்று சந்தேக நபரான பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். கம்பகாவை சேர்ந்த 42 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.5)

# சமுர்த்திக் கணக்கு வைப்புக்களை விரைவில் கணினி மயப்படுத்துங்கள்

## பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்திப் புத்தகத்தில் வாடிக்கையாளரின் கணக்கு விவரங்கள் பதிவுகளை முழுமையாகக் கணினி மயப்படுத்தினால் சேவைகளைப் பெற்று கொள்வது இன்னமும் சுலபமாக அமையும் என்று வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களுக்குக் குறைந்த வட்டியில் இலகு கடன்கள், குழுக் கடன்கள், வாழ்வாதாரக் கடன்கள் போன்றவற்றைச் சமுர்த்தி வங்கிகள் வழங்கி வருகின்றன. ஆனால் ஏனைய வங்கிகள் போன்று வங்கிப் புத்தகங்கள் கணினி மயப் படுத்தப்பட்ட அச்சுபதிவில் வரவு செலவுகள் பதியப்பட்டு வழங்கப்படுவதில்லை. சமுர்த்தி வங்கிப் புத்தகங்கள் வரவு அல்லது செலவுத் தொகை வைப்பிலிடப்படும் போது வங்கிப் புத்தகத்தில் கையால் எழுதப்பட்டு வழங்கும் நடைமுறையே அநேகமான வங்கிகளில் காணப்படுகிறது.

ஏனைய வங்கிகள் போன்று கணனி மயப் படுத்தப்பட்ட வங்கிப் புத்தகங்கள் வழங்கப் படுவதில்லை. சமுர்த்திப் புத்தகங்கள் கணினி மயப்படுத்தப்பட்டால் பண வைப்பு, மீதி சரி பார்த்தல் போன்ற விடயங்களை விரைவாகப் பெற்றுக்கொள்வதோடு இலகுவாக அவதானிக்கவும் முடியும் என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட சமுர்த்திப் பிரிவு தெரிவித்ததாவது:

இதுவரை சுமார் 8 சமுர்த்தி வங்கிகளில் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இவை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை. யாழ்ப்பாண மாவட்டத்தில் கோண்டாவில் மற்றும் யாழ்ப்பாண நகர் கிழக்கு வங்கிகள் இவ்வாறு கணினி மயப் படுத்தப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் ஏனைய சமுர்த்தி வங்கிகளில் நடவடிக்கைகளும் கணினி மயப்படுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (து-7)

# தமிழரின் கலாசாரத்தை அழிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது

## மாவை எம்.பி. தெரிவிப்பு

மன்னார், ஜூலை 8
தமிழர் பூமியை ஆக்கிரமிப்பதில் இருந்தும், தமிழர் பண்பாடு அழிக்கப்படுவதிலிருந்தும் பாதுகாப்பதற்காகவே இந்தப் பொங்கல் விழாவில் கலந்து கொள்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.
அதில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இங்கு போரால் ஏற்பட்ட சூழ்நிலையைப் பயன்படுத்திக் கோயிலைச் சுற்றி பௌத்த விகாரை அமைத்து இந்தப் பிள்ளையார் ஆலயத்தின் உரித்தைப் பௌத்த மயமாக்க முயற்சிக்கப்படுகின்றது. தமிழர்களின் கலாசார, பண்பாட்டு இறை நம்பிக்கைகளைச் சீர்குலைப்பதை ஏற்க முடியாது.
எமது பிரதேசங்களின் புனித பூமிகளை, தமிழர்களுக்குச் சொந்த மானமத நம்பிக்கைக்குரிய புனித பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டும்.
தமிழர் பண்பாடுகள் அழிக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்காகவே இந்தப் பொங்கல் விழாவில் கலந்து கொள்கின்றோம்- என்றார். (எ-213)

# தமிழர் நிலத்தை விடுவித்தாலே நல்லிணக்கம் உருவாக முடியும்

## சிவமோகன் எம்.பி. சுட்டிக்காட்டு

மன்னார், ஜூலை 8
தமிழர்களின் காணிகளை விடுவிக்கும்போதே நல்லிணக்கம் ஏற்படும். தமிழர்களின் பூர்வீக நிலங்களை அவர்களிடம் ஒப்படைக்க முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிவமோகன் கோரிக்கை விடுத்தார்.
முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பொங்கல் விழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.
அதில் கலந்துகொண்டபின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் பரம்பரை பரம்பரையாகத் தமிழர்களால் ஆட்சி செய்யப்பட்ட பிரதேசம்.
தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கடந்த ஆண்டு இறுதியில் தலைமை அமைச்சராகச் செயற்பட்டபோது அவரது செயலரால் தொல்பொருள் திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டு இங்கு புத்தர் சிலை நிறுவப்பட்டது. நாங்கள் புத்தருக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் முறை தவறிய நபர்களுக்கு எதிரானவர்கள்.
தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களை அழிப்பதையும், தமிழர்களின் பூர்வீக நிலங்களைத் தொல்தொருள் திணைக்களத்தின் ஊடாக அபகரிப்பதையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.
தமிழ் மக்களின் நிலங்களை அவர்களிடம் ஒப்படைக்க முன்வர வேண்டும். அப்போதுதான் நல்லிணக்கம் ஏற்படும்- என்றார். (எ-213)

# சோதனையும் வேதனையும் நிறைந்த காலத்தில் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்

## அமைச்சர் ஹலீம் வேதனை



கொழும்பு, ஜூலை 8
உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் சோதனைகளுடனும், வேதனைகளுடனும்தான் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறு தெரிவித்தார், முஸ்லிம் சமய கலாசார மற்றும் தபால்துறை அமைச்சர் ஏ.ஹலீம்.
அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில் கல்ஹின்ன முஸ்லிம் பாடசாலையின் தொழில்நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஊடகங்கள் மிகவும் சிறிய விடயத்தை மிகப் பெரிய பூதாகரமான செய்தியாகக் காட்டி இனவாத விசத்தை கக்கி வருகின்றன. ஊடக சுதந்திரம் இருப்பதால் சிறிய பிரச்சினையெல்லாவற்றையும் இன்று விஸ்வரூபமாகக் காட்டி சமூகத்தை பல துருவங்களாகப் பிரித்து வருகின்றனர். அவர்கள் பூதாகரமாகக் காட்டிய எல்லா விடயங்களையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர்கள் மற்றும் சட்டத் துறையினர் ஆராய்ந்து அவை உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்று தெட்டத் தெளிவாக எடுத்தியம்பிய போதிலும் கூட அதைக் கூட மூடி மறைக்கின்ற செயற்பாடுகளையே ஊடகங்கள் மேற்கொண்டு வருகின்றன. முன்னாள் அமைச்சர் ரிசாத், முன்னாள் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி மற்றும் மருத்துவர் ஷாபி ஆகியோருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கள் எல்லாம் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டபோதிலும், அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு ஊடகங்களுக்கு இல்லை.
முஸ்லிம்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் பின்னர் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். முஸ்லிம்களுடைய எல்லா விடயத்தையும் அக்கு வேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து வருகின்றனர். பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், தனித்துவமான கலாசார உடைகள் தொடர்பாக பெரும்பான்மையினர்கள் பேசி வருகின்றனர். பெண்கள் கூட பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அரசில் பணியாற்றுகின்ற பெண்களுடைய உடை சம்மந்தமாக அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் - என்றார். (ஒ.5)

# பொதுநோக்கு மண்டபத்தை பார்வையிட்ட மராமத்துக் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாணம் புதிய சோனகதெருவில் மக்கள் வழங்கிய காணியில் யாழ்ப்பாண மாநகர சபை அமைக்கவுள்ள பொது நோக்கு மண்டபத்தை மாநகர மராமத்துக்குழுவினர் பார்வையிட்டனர்.
யாழ். மாநகரசபையின் 2019ஆம் ஆண்டுக்கான வட்டார நிதியொதுக்கீட்டின் கீழ் மண்டபம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.
மாநகரசபையின் 10ஆம் வட்டாரமான ஜே/88 புதிய சோனகத்தெரு வட்டாரத்துக்கு 2019ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாநகர சபையால் ஒதுக்கப்பட்ட ரூ. 3 மில்லியன் செலவில் புதிய பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்படவுள்ளது.
இதற்கான காணி மற்றும் ஏது நிலைகளை பார்வையிடுவதற்காக முதற்கட்டமாக 10ஆம் வட்டார தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் மு.மு.மு. நிபாஹிர், ஆறுகால்மடம் அறிவொளிசனசமூகநிலையத்தலைவர் தம்பிராசா, 10ஆம் வட்டார இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூலக்கிளைத் தலைவர் ஜெகன் ஆகியோரின் அழைப்பின் பேரில் யாழ். மாநகரசபையின் மராமத்துக்குழுவினர் இடத்தைப் பார்வையிட்டனர்.
இந்தக்குழுவில் மராமத்துக்குழுத்தலைவர் இரா. செல்வவடிவேல், குழுவிலுள்ள அங்கத்தவர்களான யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் சொலமன் சூ.சிறில் ப.தர்சானந், ம. மயூரன், நீ.பிலிப், மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர் திருமதி ஜெயந்தினி மற்றும் யாழ். மாநகரசபையின் வேலைப்பகுதி பொறியியலாளர் இராஜவரதன் ஆகியோர் அடங்கியிருந்தனர். (து)



# மக்கள் சந்திப்பு

வவுனியா, ஜூலை 8
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கொல்லர்புளியங்குளம் கிராம மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன.
அங்குள்ள அம்மன் கோவிலில் இவை நேற்று முன்தினம் ஆராயப்பட்டன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அதில் கலந்து கொண்டார். (து)

# வடமராட்சியில் வீதி விளக்கு பொருத்த ரூ. 10 மில்லியன்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமராட்சியில் மூன்று உள்ளூராட்சி சபைகளுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவற்றுக்கென 10 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அதன்படி பருத்தித்துறை பிரதேச சபைக்கு 4 மில்லியன் ரூபாவும் பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகரசபை ஆகியவற்றுக்கு தலா 3 மில்லியனும் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-173)

# கையூட்டு வாங்குவது மட்டுமன்றி வழங்குவதும் பாரதூரக் குற்றமே!

## கபே அமைப்பின் பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 8
கையூட்டு வாங்குவதை மாத்திரம் குற்றமாகக் கருதுகிறார்கள். ஆனால் கையூட்டுக் கொடுப்பதும் பாரதூரமான குற்றமே என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) பதில் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.
அம்பாறை சாய்ந்தமருதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தமர்வு ஒன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கையூட்டும் ஊழலும் நாட்டில் பெருகியுள்ளன. இதனாலேயே அரசுக்குச் செல்லவேண்டிய வரி ஒரு சில தனிநபருக்குச் செல்வதால் மக்கள் மீது வரிச்சுமை ஏற்றப்படுகின்றது. பொருள்களின் விலையேற்றம் இவையனைத்துக்கும் இதுவே காரணமாகும். ஊழல் கையூட்டு முறையற்ற விதத்தில் சொத்துச்சேர்க்க முற்படுகையில் சாதாரண பொது மக்களே பாதிப்புறுகின்றனர். நாட்டில் கையூட்டுக் கொடுத்து முறையற்ற விதத்தில் கட்டடம் கட்டிக்கொண்டிருக்கும்போதே இவை நாட்டிலே நடைபெற்றிருக்கின்றன. கையூட்டையும் ஊழலையும் ஒழிப்பதன்மூலமே நாட்டை முன்னேற்றுப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும். இவை அதிகரிக்குமானால் தேசிய வருமானத்தில் பெரு வீழ்ச்சி ஏற்படும். கையூட்டு வாங்குவதும் கொடுப்பதும் இடைத்தரகர்களாகச் செயற்படுவதும் பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. இலங்கை போன்ற நாட்டில் கையூட்டு குறைந்தபாடில்லை. அதிகரித்தே வருகிறது. இதனால் வெளிநாடுகளில் வட்டியுடன் கடன் பெற்றுநாட்டைநடத்தவேண்டியுள்ளது. நாடு பின்தங்கி அபிவிருத்தி காணாமல் காணப்படுகிறது. சோமாலியா போன்ற நாடுகளின் வறுமைக்கு கையூட்டு அதிகரித்தமையும் ஒரு காரணமாகும். அரச அதிகாரிகள் மக்களுடைய் வரிப்பணம் மூலமே சம்பளம் பெறுகிறார்கள். அரச திணைக்களங்களைச் சேர்ந்தோர்கள் மக்களிடத்தில் நியாயமாகவும் நேர்மையாகவும் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். சேவைகளை முடித்துக் கொள்வதற்காக கையூட்டு வழங்கப்படுகிறது. அரச அதிகாரிகள் இவ்வாறான செயற்பாடுகளில் கைது செய்யப்பட்டால் தலைகீழாக மாறி சிறைவாசம் அனுபவிக்க நேரிடும். அரச திணைக்களங்களைச் சேர்ந்த சில உயர் பதவிகளையுடையோர் சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள் .
கையூட்டு ஊழல் வழக்கு தொடுக்கப்பட்டால் மாவட்ட நீதிமன்றம் ஊடாக விசாரணைகள் இடம் பெறாது. மாறாக கொழும்பில் மாத்திரமே விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.
பொது மக்கள் பயமில்லாமல் கையூட்டு ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறியத்தாருங்கள். அவசர இலக்கம் 1954 ஊடாகவும் எழுத்து மூலமாகவும் அரச அதிகாரிகளுக்கு எதிராகத் தங்களது முறைப்பாடுகளைப் பயமின்றி முன்வையுங்கள் எமது நாட்டை இலஞ்ச ஊழலற்ற தேசமாக மாற்றியமைக்க அனைவரும் ஒத்துழையுங்கள்- என்றார். இதன்போது இலஞ்சம் ஊழல் ஆணையத்தின் அதிகாரி.ரீ.சம்பத் தென்னக்கோன் தெரிவித்ததாவது:
பிள்ளைகளுக்கு வீட்டிலிருந்தே கையூட்டை ஊக்குவிக்கும் செயற்பாட்டை சில பெற்றோர்கள் வழிவகுக்கின்றனர்.
ஊழலைத் தவிர்ப்பது, தடுப்பது எவ்வாறு என்பதை சமூக மட்டத்தில் குறைத்துக் கொள்வது தொடர்பாக நாங்கள் பல இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்திவருகின்றோம் - என்றார். (து)

# சிறுபான்மையினரது வாக்குகளும் தேவை

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஜூலை 8

சிறுபான்மையினரின் வாக்குகள் தேவையில்லை என்று பொதுமக்கள் முன்னணி கூறியதாகப் பொய் பரப்புரைகளை ஐக்கிய தேசியக்கட்சி முன்னெடுக்கின்றது. வாக்குகள் வேண்டாமென்று கூறும் அரசியல்வாதிகள் இருப்பார்களா? என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு சிறுபான்மையினரின் வாக்குகள் தேவையில்லை என்று பொதுமக்கள் முன்னணி கூறியதாக ஏனைய கட்சிகளால் மக்கள் மத்தியில் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுமக்கள் முன்னணி மாத்திரமல்ல எந்தக் கட்சியாக இருந்தாலும் வாக்குகள் தேவையில்லை என்று கூற முடியாது. கூறியதும் இல்லை.



அரசியல் கட்சியொன்றுக்கு அனைத்து இன, மதங்களினதும் ஆதரவும் அத்தியாவசியமானதாகும்.

நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கும் போது பயமாக இருக்கிறது. பொருளாதாரம் மற்றும் ஏனைய பிரச்சினைகளைப் பார்க்கும்போது 4 ஆண்டு காலத்துக்குள் இவ்வாறு நாட்டை சீரழிக்க முடியுமா என்று ஆச்சரியமாக இருக்கிறது.

இதற்கு முன்னர் இது போன்று பிரச்சினைகள் ஏற்பட்டதில்லை. அவ்வாறு சில பிரச்சினைகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அரசு அவற்றுக்குமுகம்கொடுத்தது. ஆனால் தற்போதைய அரசு பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது.

போரை முடிவுக்கு கொண்டு வந்ததன் பின்னர் அபிவிருத்திகளை இலக்காகக் கொண்டு செயற்பட்டோம். 30 ஆண்டு கால போரால் எவ்வித அபிவிருத்தியும் இன்றி காணப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அந்தப் பகுதிகளில் அதிகளவு அபிவிருத்தி வேலைகளும் முன்னெடுக்கப்பட்டன. அடுத்த தேர்தலில் நாம் தோல்வியடைந்தோம். ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரைகளும், வெளிநாட்டு அழுத்தங்களும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தின.

அடுத்து ஆட்சிக்கு வரும் அரசு மக்களுக்கு பொறுப்பு கூறுவதாகவும், நாட்டுக்கு பொறுப்பு கூறுவதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறானதொரு அரசைத் தெரிவு செய்வதற்கு தற்போதுள்ள அரசை வீழ்த்துவது எம் அனைவரதும் பொறுப்பாகும் - என்றார். (ஓ.5,31)

## அரசியல் தலைவர்கள் அமைதி, சமாதானத்தை நிலைநிறுத்தவும்

### இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு வலியுறுத்தல்

தீவிரவாதம் எந்தவொரு மதத்தையும் சார்ந்ததல்ல. அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளுக்கு எந்தவொரு சமூகப்பிரிவினரும் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சுட்டிக்காட்டியிருக்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, சமூகங்களுக்கிடையில் அமைதி, சமாதானம், இடைத்தொடர்பு என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் அதிகரித்து வருவது தொடர்பில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு விடுத்திருக்கும் அறிக்கையொன்றிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை முஸ்லிம்கள் தற்போது எதிர்நோக்கியிருக்கும் சூழ்நிலை மற்றும் அதிகரித்துவரும் அச்சுறுத்தல்கள், வெறுப்புணர்வுப்பேச்சு தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதுடன், கண்காணித்தும் வருகிறோம்.

மக்காவில் மே மாதம் 31 ஆம் திகதி 14 ஆவது இஸ்லாமிய மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் தீர்மானமாக இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பரவிவரும் வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றை முடிவுக்குக் கொண்டுவருமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தத் தீர்மானிக்கப்பட்டது. முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டோம். இலங்கையின் கலாசாரம் மற்றும் பொருளாதாரம் என்பவற்றுக்கு நேர்மறையான பங்களிப்பை முஸ்லிம் சமூகம் வழங்கி வருகின்றது.

தீவிரவாதம், அடிப்படைவாதம் மற்றும் அவற்றின் எந்தவொரு வகையான பிரதிபலிப்பையும் நாங்கள் கடுமையாக எதிர்ப்பதுடன், தொடர்ந்தும் அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறோம். அதேவேளை தீவிரவாதம் எந்த மதத்தையும் சார்ந்ததல்ல என்பதுடன், அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளுக்கு எந்தவொரு சமூகமும் பொறுப்பல்ல என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இலங்கையிலுள்ள இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தூதுவர்களைச் சந்திப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுகின்றோம். சமூகங்களுக்கிடையில் அமைதி, சமாதானம், இடைத்தொடர்பு என்பவற்றை ஏற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து அரசியல் தலைவர்களிடமும் கேட்டுக்கொள்வதுடன், இனமத அடிப்படையில் மக்களை ஒதுக்குதல் மற்றும் அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்வற்றைக் தடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ஓ.5.31)

## தாக்குதல் தடுக்கப்படாமைக்கு நிர்வாகத் தோல்வியே காரணம்

### தேசிய சமாதானப் பேரவை

கொழும்பு, ஜூலை 8

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தாமை தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலர்ஹேமசிறிபெர்ணாண்டோ மற்றும் கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அப்பால் இந்த நிர்வாகக் கட்டமைப்பு முறையின் தோல்வியும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியாமைக்குப் பிரதான காரணமாகும் என்று தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.


உயிர்த்த ஞாயிறுதின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில், உயர்மட்ட பொதுச்சேவை ஊழியர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் சுமார் 250 இற்கும் அதிகமானோரை காவுகொண்ட உயிர்த்த ஞாயிறுதின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னரே தகவல்கள்கிடைத்திருந்தும் கூட அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதே அவர்கள் மீதான குற்றச்சாட்டாக இருக்கின்றது.

தாம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளின் போது, அவை குறித்து முன்னதாகவே அவசியமான தீர்மானங்களை எடுப்பதற்கு உயர்மட்ட பொதுச்சேவை ஊழியர்கள் முன்கூட்டிய அனுமதிகள் எதனையும் பெறவேண்டியதில்லை. தற்போது குற்றம்சாட்டப்பட்டுள்ள இருவருக்கும் அப்பால் இந்த நிர்வாகக் கட்டமைப்பு முறையின் தோல்வியும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியாமைக்குப் பிரதானகாரணம் என்பதை ஆதாரங்களின் ஊடாக அறிந்துகொள்ள முடிகிறது. தோல்வியடைந்த அரசமைப்புச் சதியின் பின்னர் பாதுகாப்புசபைக் கூட்டங்களுக்கு தலைமை அமைச்சர், பிரதி பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் அழைக்கப்படாமையும், குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட முன்னர் சில மாதங்களாக பாதுகாப்புச்சபைக் கூட்டங்கள் கூட்டப்படாமையும் நிர்வாக முறைமையின் தோல்விக்குள் அடங்கும். முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீது மாத்திரம் பழிசுமத்துவது நியாயமற்றதொன்றாகவே தோன்றுகிறது, என்று தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (ஓ.5)

## ஏற்றுமதிப் பொருளாதாரம் மூலமே முன்னேற முடியும்

### கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 8



**ஒருவருக்கொருவர் குறைக் கூறிக் கொண்டும் குற்றஞ்சாட்டிக் கொண்டும் இருப்பதால் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது. 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற புதிய கண்ணோட்டங்கள் எம்மிடையே ஏற்பட வேண்டும். தற்போது உள்ள கடன் சுமை, நவீன அபிவிருத்திகளை முன்னெடுப்பதிலுள்ள சவால்களை வெற்றிக்கொள்ள வேண்டுமாயின் ஏற்றுமதிகளையும், முதலீடுகளையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் உள்ளிட்ட சகலரும் நாட்டின் எதிர்காலத்தை மாத்திரம் சிந்தித்து ஒற்றுமையாக செயற்படுவோமாக இருந்தால் இலங்கை இன்னும் ஐந்து வருடங்களில் இந்து சமுத்திரத்தின் ஆரோக்கியமான நாடாக மாறும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ருவான்வெல்லை தேர்தல் தொகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய உலக நாடுகள் அவற்றின் முயற்சிகளால் முன்னேறியுள்ளன. நாம் அனைவரும் ஒத்த சிந்தனையுடன் ஒற்றுமையாக செயற்படுவோமாக இருந்தால் 5 ஆண்டுகளில் எமது நாட்டை இந்து சமுத்திரத்தில் ஆரோக்கியமான நாடாக மாற்றியமைக்க முடியும்.

21ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற பொருளாதார அபிவிருத்திகளை உருவாக்குவதே எங்களின் நோக்கமாகும். 2050 ஆம் ஆண்டாகும் போது தொழில்நுட்பம் எவ்வளவு வளர்ச்சியடையும் என்று எம்மால் கணிப்பிட முடியாது. ஆயினும் இன்று முதலே அதற்கான ஆரம்பகட்டப் பணிகளை முன்னெடுத்து முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும்.

இன்று எமது நாடு எதிர் கொண்டுள்ள கடன் சுமையிலிருந்து வெளியேற வேண்டுமாயின் எமது ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டும். ஜப்பான், சீனா, தென் கொரியா போன்ற நாடுகள் ஏற்றுமதி பொருளாதாரத்தினூடாகவே வளர்ச்சியடைந்தன. அது மாத்திரமின்றி தேர வாதத்தைப் பின்பற்றும் பௌத்த நாடான தாய்லாந்து முதலீடுகளை பெற்றுக் கொண்டு வளர்ச்சியடைந்தது. ஆகவே நாமும் அந்த வெற்றிகளை அடைய வேண்டும்.

எமது பிரச்சினைகளில் இருந்து மீண்டு வருவது அவசியமாகும். வேறு நாடுகள் எமது நாட்டை முன்னேற்றப் போவதில்லை. எதிர்காலத்துக்காக சகலரும் ஒன்றிணைந்து முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு எமக்கு பலம் இருக்க வேண்டும். அனைவரும் ஒற்றுமையாகவும், எதிர்காலத்தை பற்றி சிந்திப்பவர்களாகவும், தேசிய ஒற்றுமைக்காகவும் செயற்படாமல் மத, இன வேறுபாடுகளை தோற்றுவிப்போமானால் அதன் விளைவுகளை நாங்களே அனுபவிக்க வேண்டி வரும்.

சகலரும் ஒன்றிணைவதே தற்போது எமக்கு அவசியமானதாகும். இந்த ஒற்றுமையான பாதையில் நாடும் புதுப்பாதையில் செல்ல வேண்டும். அரசியல்வாதிகளும் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

ஒருவருக்கு ஒருவர் குறை கூறிக் கொண்டும் குற்றஞ்சாட்டிக் கொண்டும் இருப்பதால் சிறந்த எதிர்காலத்தை அடைய முடியாது - என்றார். (ஓ.5)

## மத அடிப்படைவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ராணுவத்தில் சிறப்பு பிரிவு

கொழும்பு, ஜூலை 8

பன்னாட்டுத் தீவிரவாத குழுக்கள் மற்றும் உள்நாட்டு மத அடிப்படைவாதக் குழுக்களின் அச்சுறுத்தலை கண்காணிப்பதற்கும், எதிர்கொள்வதற்குமான சிறப்பு பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சின் கீழ் இந்தச் சிறப்பு கண்காணிப்பு பிரிவு அமைக்கப்படவுள்ளதாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்புப் பிரிவுக்கு பொறுப்பாக, மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். படைகளின் தளபதியாக இருந்த இவர், இந்தப் புதிய பதவியை பொறுப்பேற்றுக் கொள்வதற்காக கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இராணுவம், கடற்படை மற்றும் வான் படையைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கும் அதிகமான சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள், மதிப்பீடுகளைச் செய்வதற்கும், எதிர் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இந்தப் பிரிவுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என, மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த சிறப்பு பிரிவுக்கான அதிகாரங்கள் தொடர்பான அரசிதழ் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை அடுத்து, இந்தச் சிறப்பு பிரிவு உருவாக்கப்படவுள்ளது. (ஓ.5)

# வீட்டில் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் மீட்பு

மன்னார், ஜூலை 8

மன்னார், கோந்தைப்பிட்டியில் உள்ள வீட்டு வளாகத்தில் இருந்து ரி56 ரகத் துப்பாக்கி ரவைகள் மன்னார் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டன என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்துறை கடற்படையினர் மன்னார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஜ.கிருஸாந்தன் தலைமையில் சென்ற பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் அந்த வீட்டின் வளாகத்தில் சோதனைகளை மேற்கொண்டனர்.

தென்னை மரம் ஒன்றுக்கு அருகில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. சிங்களப் பத்திரிக்கை ஒன்றில் சுற்றப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ரி56 ரக தூப்பாக்கிக்கு பயன்படுத்தும் 14 ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-56)

# அக்மீமன துப்பாக்கிச் சூடு கைதான சிப்பாய் பூஸாவில்

*அவசரகால சட்டத்தின் கீழ் விசாரணை*

கொழும்பு, ஜூலை 8

அக்மீமன இளநிலைப் பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சிப்பாய் காலி பூஸா முகாமின் 581ஆம் படைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அவசரகால சட்டத்தின் கீழ் அவர் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறும் வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அக்மீமன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை அக்மீமன மானவில பகுதியில்உள்ளபாடசாலையின் நுழைவாயில் அருகே பாதுகாப்பு கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 39 வயதுடைய களுதொட்டகே உதய பிரதீப் குமார என்னும் முன்னாள் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்தார். சம்பவம் நடைபெற்ற அன்று நண்பகல் 12.30 மணியளவில் பாடசாலையில் கற்கும் மூன்று பிள்ளைகளில் ஒருவர் சுகவீனம் அடைந்துள்ளதாக பாடசாலையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பிரதீப் குமார பாடசாலைக்குச் சென்றுள்ளார். பாடசாலையின் இரண்டாம் வாயில் வழியாக உள்நுழைய முயற்சித்த போது அங்கு கடமையில் இருந்த சிப்பாய் அவரை தடுத்து நிறுத்தியுள்ளார். அதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் நீண்டதையடுத்து இந்த துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டமையால் அவர் உயிரிழந்தார்.

சந்தேக நபரை பூஸா முகாமில் தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் விபுல செனவிரத்னவின் சிறப்புக் கண்காணிப்பின் கீழ் அக்மீமன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அமரசேகர தலைமையில் இடம்பெற்று வருகின்றன. (ஒ.5.71)

# கோத்தபாயவை கைது செய்யுங்கள்

*முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை*



கொழும்பு, ஜூலை 8

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். அவன்கார்ட் கடல் பாதுகாப்பு நிறுவனத்தின் தலைவர் உட்பட ஏனைய அதிகாரிகளை கைது செய்யும் அதே நேரத்தில், அந்த நிறுவனத்துக்கு அதிகாரம் வழங்கிய கோத்தபாய ராஜபக்சவும் கைது செய்யப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்துக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் மக்களின் பணத்தை தவறாக பயன்படுத்தியதற்கும் அவசியமான சூழலை ஏற்படுத்தி கொடுத்தவர் கோத்தபாய ராஜபக்ச. ஆனால் நிறுவனத்தின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளைக் கைது செய்வதால் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டமை தெரியும் என்கிறார் கடற்படைத்தளபதி



*கொழும்பு, ஜூலை 8*

*தெகிவளையில் 5 இளைஞர்கள் கடத்தப்பட்டு, கிழக்கு கடற்படை தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை, அறிந்திருந்தார் என்பதை, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட குற்ற விசாரணைப் பிரிவிடம் ஒப்புக்கொண்டுள்ளார்.*

கொழும்புப் பகுதியில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட 11 பேர் குறித்து விசாரித்து வரும், குற்ற விசாரணைப் பிரிவு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அளித்துள்ள 'பி' அறிக்கையிலேயே இந்த தகவல் கூறப்பட்டுள்ளது.

தமது விசாரணைகளின் போதே, தெகிவளையில் 5 இளைஞர்கள் கடத்தப்பட்டு, கிழக்கு கடற்படை தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை, அறிந்திருந்தார் என்பதை, அட்மிரல் வசந்த கரன்னகொட ஒப்புக்கொண்டார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட இளைஞர்களைப் பற்றி முதன்முதலில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி அறிவிக்கப்பட்ட போதும், கிழக்கு கடற்படைத் தலைமையகத்தில் இருந்த இளைஞர்களை விடுவிப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு, அட்மிரல் கரன்னகொட தவறிவிட்டார் என்றும் குற்ற விசாரணைப் பிரிவினர் கூறியுள்ளனர்.

ஐந்து இளைஞர்கள் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தகவல்கள் குறித்து, சரியாகக்கவனத்தில்எடுத்துச் செயற்பட்டிருந்தால், அந்த இளைஞர்கள் மற்றும் பலவந்தமாக கடத்தப்பட்ட ஏனையவர்களையும் பாதுகாத்திருக்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர்கள் தொடர்பாக கடற்படைப் புலனாய்வு பணிப்பாளர் றியர் அட்மிரல் ஏ.கே.குருகே வழங்கிய முக்கியமான ஆதாரம் தொடர்பாக, 2009ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி, குற்றப் பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்கவிடம் அளித்த முறைப்பாட்டில், குறிப்பிடத் தவறியது குறித்தும், அட்மிரல் கரன்னகொட மீது குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம், குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை மறைத்து, குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைப் பாதுகாக்க அவர் முனைந்துள்ளார் என்று, இப்போது தெரியவந்துள்ளது, என்று குற்ற விசாரணைப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# மோடியின் பெயரில் இலங்கையில் கிராமம்

*அமைச்சர் சஜித் தகவல்*



கொழும்பு, ஜூலை 8

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திரமோடியின் பெயரில் இலங்கையில் கிராமம் ஒன்றை அமைக்கவுள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கம்பகா மாவட்டம் அத்தனகல்லை ரன்பொக்குனுகம பிரதேசத்தில் புதிய கிராமத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்த போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தேன். எனது கோரிக்கைக்கு அமைய வீடமைப்புத் திட்டத்துக்கு இந்தியா 12 ஆயிரம் லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது' - என்றார் சஜித். (ஒ.5)

# படத்தைப் பொறிப்பதற்காகவே அரசியல்வாதிகள் பிரயத்தனம்

*சாடுகிறார் நிதி அமைச்சர் மங்கள*



கொழும்பு, ஜூலை 8

எங்கள் அரசிடம் பணம் நன்றாக இருந்தால் எனது படமும் நன்றாகதான் இருக்கும். பெரும்பாலான அரசியல்வாதிகள் தங்களுடைய பெயரும் படமும் இடம்பெற வேண்டுமென்பதற்காகவே சேவை செய்கின்றனர். இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பிரபல்யத்துக்காக மக்களுக்குச் சேவையாற்றும் ஒரு மனிதர் இல்லை. ஆனால் சில விகாரைகளில், அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது பயன்படுத்தப்படும் பதாகைகளில் என்னுடைய ஒளிப்படங்களை பதிவேற்ற வேண்டாம் என்று கூறுகின்றார்கள். உண்மையாக என்னுடைய ஒளிப்படம் வெளியாக வேண்டும் என்பதற்காக சேவையாற்றும் விருப்பம் எனக்கில்லை.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு நானும் பௌசியும் இணைந்தே அடிக்கல் நட்டு செயற்பாடுகளை முன்னெடுத்தோம். ஆனால் இறுதியாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தனது பெயரை அதில் பயன்படுத்திக்கொண்டார் - என்றார். (ஒ.5)

# அடுத்தகட்ட நகர்வை ஆராயும் முஸ்லிம் எம்.பிக்களின் கூட்டம்

அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆராய்வதற்கு அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் பங்கேற்கும் முக்கிய கூட்டமொன்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதி இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அசாதாரண நிலமைகளைக் கட்டுப்படுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்காகவே முஸ்லிம் பிரதிநிதிகள் தங்களின் அமைச்சுப் பதவிகளைத் துறந்தார் கள். தற்போதைய அரசியல் நிலமைகள், முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடருகின்றமையால் அவை குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டத்தை நட்த்தத் தீர்மானித்துள்ளோம்.

நெருக்கடியான அரசியல் நிலமைகள், கல்முனை வடக்கு உப பிரிவைத் தரமுயர்த்துதல், மீண்டும் அமைச்சு பதவிகளைப் பொறுப்பேற்றல், உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன.

அதேவேளை முதற்கட்டமாக அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து, எமது சமூகம்சார்ந்த கருத்துக்களை முன்வைத்திருந்தோம். மீண்டும் அவர்களை நேரில் சந்திப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். ஆனால் அதற்கான நேரஒதுக்கீடுகள் இதுவரையிலும் உறுதி செய்யப்படவில்லை - என்றார். (ஒ.5)

# சந்தியில் நிற்போரால் பயணிக்க முடியாத அவலம்

நடவடிக்கை எடுக்க பொலிஸிடம் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 8

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள நாதன் ஒழுங்கையின் முதலாம் சந்தியில் தினமும் இரவு வேளைகளில் கூடும் நபர்கள் மதுபோதையில் நின்று அந்த வழியில் செல்வோருக்கு இடையூறு ஏற்படுத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இவர்கள் கொட்டன்கள் மற்றும் இரும்புக் கம்பிகளை வைத்திருந்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்கின்றனர் என்றும், தகாத வார்த்தைகளால் ஏசி அட்டகாசம் புரிகின்றனர் என்றும் அங்குள்ள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவர்களின் இத்தகைய நடவடிக்கைகளால் குறிப்பாகப் பெண்கள் அந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவித்தபோதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கிறார்களில்லை என்றும் மக்கள் பொலிஸார் மீதும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொலிஸார் இனியும் கவனவீனமாக இராது, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவிப் பொலிஸ் அத்தியட்சகராவது இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (த-9)

## இலங்கைத்...

இவ்வாறு கண்டியில் நேற்று நடைபெற்ற பொதுபலசேனா அமைப்பின் மாநாட்டில் அதன் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இன்று எமது வீட்டுக்குள் விஷப்பாம்பு வந்துவிட்டது. வீட்டுக்குள் இருக்கும் பாம்பை நாங்கள் வெளியேற்ற வேண்டும். வீட்டுக்குள் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் இவ்வருடம் இதுவரை எட்டாயிரம் பேர் வரை உலகில் கொல்லப்பட்டுள்ளனர். அப்படியான அடிப்படைவாதம் இது.

**சிங்கள அரசை அமைப்போம்**

சிங்களவர்கள் விரும்பும் அரசை ஏற்படுத்துவோம். நாடாளுமன்றத்தில் சிங்களவர்கள் கோலோச்சும் நிலையை ஏற்படுத்துவோம். சிங்களவர்கள் முதுகெலும்புடன் இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேரில் குற்றம் செய்யாதவர்களைக் காண முடியாது. இனத்துக்குத் தலைமை வழங்கக் கூடிய ஒரு அரசியல் கலப்பற்ற தலைவன் எமக்கு வேண்டும். ஜனநாயகத்தின் காப்பரணான நாடாளுமன்றத்தில் செயற்படும் ஒருவர் - சிங்களவரின் நாடாளுமன்றம் இன்று தேவை. சிங்களவருக்கு ஏற்ற சட்டங்கள் தேவை. நமக்கான நாடாளுமன்றம் வேண்டும்.

காவிகளின் பலத்துடன் நாம் இந்த நாட்டை வெற்றியை நோக்கிக் கொண்டு செல்லலாம். நாட்டில் 10 ஆயிரம் விகாரைகள் உள்ளன. 7 ஆயிரம் விகாரைகளை நாம் ஒன்று சேர்த்தால், பிரிவினைகளை மறந்தால் நாம் எதிர்பார்க்கும் வாக்குகள் கிடைக்கும். நாங்கள் கல்வி பயின்று அனுபவத்துடன்தான் வந்துள்ளோம்.

எங்களால் இந்த நாட்டை நல்ல இடத்துக்குக் கொண்டு செல்லலாம். 70 வருடம் இந்த நாட்டை வீணாக்கியவர்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டும். ஆட்சியைக் கைப்பற்றுவது எமது நோக்கமல்ல. ஆனால், ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எமக்கு இருக்க வேண்டும். இன்று சிங்களவர்களை சிங்களவர்களாக இருக்கவைக்க எமக்கு அரசியல் அதிகாரம் வேண்டும். அதற்காக நாம் பாடுபட வேண்டும்' - என்றார். (ம-22)

## முஸ்லிம்களின்...

செய்த தாக்குதலின் பின்னராக அண்மைய காலங்களில் எமது மக்களின் மீது நடக்கும் அநீதிகள் மனவேதனையாக உள்ளது. ஹபாயா, ஹிஜாப் அணிவதில் எமது பெண்களுக்கு வந்த சிக்கலை முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் போராடி வெற்றி பெற்றோம்.

எமது அமைச்சர்களில் ஒருவரான ரிசாத்தையும் முஸ்லிம் ஆளுநர்களையும் குறிவைத்து அத்துரலிய தேரர் இருந்த உணவொறுப்பு மூன்று நாள்கள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அது நாட்டுக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் நாம் எல்லோரையும் ஒன்று திரட்டி 9 அமைச்சர்களையும் பதவி விலகவைத்து நாட்டைப் பாதுகாத்தோம். இல்லாது போனால் இந்த நாடு இனவாதத்தில் தீக்கீரையாகி இருக்கும்.

இப்போது எமது பிரச்சினைகளை அரசு தீர்த்து வைக்க முன்வருகிறது. அரச தலைவர் தேர்தலை நாம் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ள இந்த காலகட்டத்தில் எமது இருப்புக்கு பாரிய சவால் இருக்கிறது.

எம்.எஸ்.காரியப்பர், எம்.சி.அஹமத், ஏ.ஆர்.எம்.மன்சூர், தலைவர் அஷ்ரப், போன்றோர்கள் கல்முனையை மாவட்ட காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் அடங்கிய முக்கிய நகரமாக மாற்றியமைத்தவர்கள். கல்முனையை செதுக்கியதில் முஸ்லிம்களின் பங்கு அளப்பெரியது. இதனை அறியாமல் தமிழ்- முஸ்லிம் உறவை சீரழித்து கல்முனையை கூறுபோட மூன்றாம் தரப்பின் உதவியுடன் உணவொறுப்பில் ஈடுபடுகின்றனர். வெளிமாவட்ட அரசியல் தலைவர்கள் இதனை வழிநடத்திச் செல்கிறார்கள். அரசுக்கும், அரசியல் கட்சிகளின் தலைமைகளுக்கும் ஒரு செய்தியை கூறியுள்ளோம். கல்முனை பிரிப்பதாக இருந்தால் ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இருந்தது போல பிரியுங்கள்.

கிளிநொச்சி, யாழ், வவுனியா, மட்டக்களப்பு, போன்ற பல நகரங்கள் தமிழ் மக்களின் முக்கிய நகரங்களாக இருக்கிறது. ஆனால் கல்முனை மாநகரம் முஸ்லிம்களின் தாயகம் அதை யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. தமிழ் தலைமைகள் நியாயமில்லாமல் நடக்கிறார்கள், அவர்கள் இதன் பின்விளைவுகளை சிந்திக்க வேண்டும். யாழில் வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தழுதழுத்த குரலில் 'தமிழர்களின் தீர்வு திட்டம் மழுங்கடிக்கப்படுகிறது, அரசு ஏமாற்றுகிறது என்று பேசினார்'

தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயங்களை உணர்ந்து அவர்களுடன் கைகோத்திருக்க வேண்டிய உணர்வு முஸ்லிம்களுக்கு இருந்தது. எங்களின் நியாயத்தை மறுக்கும் போது எங்களின் பாணியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிவரும். ஒரு கையால் தட்டி சத்தம் வராது. இரு கைகளும் இணைந்து தட்டிஓசைஎழுப்ப வேண்டும். முஸ்லிம்களின் உதவி இல்லாமல் தமிழர்களின் தீர்வு திட்டங்கள் ஒருபோதும் நடக்காது - என்றார். (ம)

## வறட்சிப்...

விவரம். வடக்கின் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களும் வறட்சியால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. ஐந்து மாவட்டங்களிலும் 57 ஆயிரத்து 473 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 170 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நெடுந்தீவில் ஆயிரத்து 31 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 71 பேரும், வேலணையில் 2 ஆயிரத்து 798 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 642 பேரும், ஊர்காவற்றுறையில் 2 ஆயிரத்து 422 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 848 பேரும் காரைநகரில் 2 ஆயிரத்து 760 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 297 பேரும், மருதங்கேணியில் ஆயிரத்து 60 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 630 பேரும், சாவச்சேரியில் 3 ஆயிரத்து 361 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 484 பேரும், கரவெட்டியில் 336 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 64 பேரும், சங்கானையில், 6 ஆயிரத்து 267 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 206 பேரும், சண்டிலிப்பாயில் ஆயிரத்து 41 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 345 பேரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதைத் தவிர காரைநகரில் கடும் காற்றுக் காரணமாக இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் இருவர் அங்கு காணாமல் போயுள்ளனர்.

வவுனியாவில் வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 400 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 941 பேரும், முசலியில் 3 ஆயிரத்து 722 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 627 பேரும், மாந்தை மேற்கில் 5 ஆயிரத்து 808 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 730 பேரும், மன்னார் நகரத்தில் வறட்சியால் 2 ஆயிரத்து 45 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 460 பேரும், மடுவில் 4 ஆயிரத்து 99 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 349 பேர் என மாவட்டத்தில் 18 ஆயிரத்து 74 குடும்பங்களைச் சேர்ந்த 63 ஆயிரத்து 115 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 322 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 185 பேரும், பூநகரியில் 3 ஆயிரத்து 274 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 41 பேரும், கரைச்சியில் ஆயிரத்து 920 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 36 பேருமென மாவட்டத்தில் மொத்தம் 5 ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 262 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 296 பேரும், கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் 10 ஆயிரத்து 799 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 797 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் மொத்தமாக 12 ஆயிரத்து 766 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 93 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**இவ்வாறு வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 57ஆயிரத்து 473 குடும்பங்களைச் சேர்ந்த** ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 170 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-21)

## பதவிக்காலம்...

வுள்ளார் அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு சபாநாயகர் கையொப்பமிட்டு அதனை நடைமுறைக்கு கொண்டுவந்த தினமான 2015ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதியே அரச தலைவரின் பதவிக்காலம் ஆரம்பிப்பதாக அரச தலைவரின் சட்ட ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தனது பதவிக்காலம் 2020ஆம் ஆண்டில் முடிவடைவதாகக் கருதும் அரச தலைவர் அதனை விளக்கிக் கூறுமாறே உயர்நீதிமன்றத்திடம் அபிப்பிராயம் கேட்கவுள்ளார். எதிர்வரும் 11ஆம் திகதி இதற்கான கடிதத்தை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பவுள்ளார் அரச தலைவர்.

ஏற்கனவே அரச தலைவரின் பதவிக்காலம் இவ்வருடம் முடிவடைவதாக உயர்நீதிமன்றம் கூறியிருந்த நிலையில் அரச தலைவர் மீண்டும் இவ்வாறு விளக்கம் கோரவுள்ளமை அரசியலில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-22)

## தொடருந்து...

தொடருந்துக் கடவையில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பற்ற கடவையில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் விபத்துக்கள் இடம்பெறுவது தற்போது அதிகரித்து வருகின்றன. குறித்த தொடருந்துக் கடவையில் கடந்த 25ஆம் திகதி படையினரின் மருத்துவப் பிரிவினர் பயணித்த கனரக வாகனத்தை தொடருந்து மோதித்தள்ளியதில் ஆறு சிப்பாய்கள் உயிரிழந்தனர். அந்தச் சம்பவத்துக்கு முன்னரும் அங்கு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் பாதுகாப்புக் கடவைகள் இன்னும் சரிவரப் பொருத்தாத காரணத்தால் தற்போது மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். (ம-21,6,35)

## 4 பயங்கரவாத...

வேண்டி வரலாம் என நான் கூறிவைக்க விரும்புகின்றேன்.' இவ்வாறு கண்டியில் நேற்று நடைபெற்ற பொதுபலசேனா அமைப்பின் மாநாட்டில் அதன் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சம்பிரதாய முஸ்லிம்கள் எவ்வளவு மாறியிருக்கின்றார்கள் என்பதை அண்மைய தாக்குதல்களில் அறிந்துகொண்டோம். கடந்த காலங்களில் விட்ட எச்சரிக்கைகளைப் பற்றிப் பேசாமல் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஒழிக்க நாம் செயற்பட வேண்டும்.

இன்று ஒரு பக்கம் சோபா ஒப்பந்தத்தால் நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறி. மறுபக்கம் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் செயற்பாடு, இன்னொருபக்கம் பலம்வாய்ந்த உலக நாடுகளின் புலனாய்வுச் சேவைகள் நமது நாட்டை கூறுபோட செயற்படும் நடவடிக்கை என்று பல பிரச்சினைகள்.

நாம் உலமா சபையுடன் கவனமாக இருக்க வேண்டும். உலமாக்களுடன் பேசுவதை அரச தலைவர்கள் நிறுத்த வேண்டும். சுபி முஸ்லிம்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டு அவர்களுடன் பேச வேண்டும். அல் - தக்கியா என்ற போர்வையில் உலமா சபை செயற்படுகின்றது.

உலமா சபைக்கு இன்று பயங்கரவாதத்துடன் நேரடித் தொடர்பு உள்ளது. அவர்கள் இந்தோனேசியா, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களுடன் தொடர்பில் உள்ளனர். 4 அமைப்புக்களுடன் நேரடித் தொடர்பில் உள்ளனர்.

இங்கே 40 வகையான மொழிபெயர்ப்புக்களுடன் குரான் உள்ளது. 1950ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்ட ஒரு குர்ஆன் உள்ளது. அந்த குர்ஆன் ஓரங்கட்டப்பட்டுள்ளது. அரசுக்குள்ளே அரசு, சட்டத்துக்குள்ளே சட்டம், நீதிமன்றத்துக்கு வெளியே காதி சட்டம் என வெவ்வேறான சட்டங்கள் உள்ளன. எந்த **அரசு வந்தாலும் வஹாபிவாதிகள் அதில் உள்ளனர். அட்டுலுகமவில் இன்று தப்லீக் ஜமாத் செயற்படுகின்றது.**

தலைக்கு மேலே பறந்து சென்றாலும் தலையில் கூடுகட்ட நாம் விடமாட்டோம். உலமாக்கள் இங்கு வெளியேறும் காலம் வெகு தொலைவில் இல்லை. இப்படியே சென்றால் நீங்கள் இங்கு இருக்க முடியாது. உலமாக்களின் கொஞ்ச வாக்குகளுக்காக எமது அரசியல்வாதிகள் அலைகின்றனர்' - என்றார். (ம-22)

## இலங்கையில்...

வில்லை. இதுபற்றி உலக சமுதாயமும் கவலைப்படாத சூழ்நிலை நிலவுகின்றது.

இலங்கையில் இன்னும் அங்கு வாழ்கிற மக்களுக்குத் துயரம் தீரவில்லை. இன்னும் இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன. இலங்கையில் நிகழ்ந்தது போர்க் குற்றம் அல்ல. திட்டமிட்டு இன அழிப்பு நடவடிக்கையைத் தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் நிகழ்ந்த தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு குற்றம் தொடர்பாக இதுவரை பன்னாட்டுச் சமுதாயம் விசாரணை நடத்தவோ, அவர்களைத் தண்டிக்கவோ முன்வரவில்லை.

போஸ்னியாவில் இனப்படுகொலை நடந்த போது, ஐ.நா. பாதுகாப்புப் படை அங்கே அனுப்பப்பட்டு, அந்த மக்கள் பாதுகாக்கப்பட்டனர். இப்போது, இலங்கையில் இருக்கக்கூடிய சூழ்நிலையிலும் இன அழிப்பு நடவடிக்கை தொடர்கின்றது. எனவே, இதில் ஐ.நா. சபை தலையிட்டு, அம்மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இந்த மாநாடு நடைபெறுகிறது - என்றார்.

நேற்று நிகழ்வுக்கு முன்னதாக மாநாட்டு மலரை இந்திய தேசிய லீக் அகில இந்திய பொதுச்செயலர் எம்.ஜி.கே. நிஜாமுதீன் வெளியிட்டார்.

தொடர்ந்து, ஓவியர் டிராட்ஸ்கி மருதுவின் 'மாவீர நடுகற்கள்' நூலையும், வைகறைவாணனின் 'கொடை தருக, கோடி பெறுக' என்ற நூலையும், குறுந்தகடையும் பழ. நெடுமாறன் வெளியிட்டார். பின்னர், பாவரங்கம், கருத்தரங்கம், பொது அரங்கம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-22)

## 70 பவுண்...

டப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி - துன்னாலைப் பகுதியிலேயே மேற்படி கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டில் இருந்த புலம்பெயர் உறவினர்கள், துன்னாலையில் உள்ள உறவினர்கள் வீட்டுக்கு வந்திருந்த போது சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் பின்பக்க ஜன்னல் கம்பிகளை அறுத்து கொள்ளையர்கள் வீட்டிலுள் இறங்கியுள்ளனர். வீட்டில் இருந்தவர்களை மயக்கியே கொள்ளையடித்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. சம்பவ இடத்துக்கு மோப்ப நாய்கள், மற்றும் சோக்கோ பொலிஸாரின் உதவியுடன் பருத்தித்துறைப் பொலிஸார் விரைந்தனர். அவர்கள் அங்கு விசாரணைகளில் ஈடுபட்டனர். கைரேகை அடையாளங்களைப் பதிவு செய்வதற்கு முயன்றனர். எனினும் கொள்ளையர்கள் கையுறையைப் பயன்படுத்தியே மின்குமிழ்களைக் கழற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-21,26)

## சரியான...

குறைப்பதற்கும், ஜனநாயகக் கட்டமைப்புக்கள் நிறுவப்படு வதை உறுதிசெய்வதற்கும் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இலங்கையின் முயற்சி யில் சரியான திசையின் ஒரு படி - என்று இலங்கை ஆயர்கள் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசமைப்பின் 18ஆவது திருத்தம் கைவிடப்படுவது நீதித்துறையின் சுதந்திரத்தை வலுப்படுத்தவும், சட்டத்தின் கொள்கைகளை நிலைநிறுத்தவும் வழிவகுக்கும். எனவே அனைத்து அரசியல் கட்சிகளும் தேசிய மற்றும் மக்களின் நலனுக்காக தங்களின் கருத்தியல் வேறுபாட்டை ஒதுக்கிவைத்து நல்லாட்சியை அமைக்கும் நோக்கத்துடன் 19ஆவது திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்றுள்ளது. (ம)

# ஆப்கானில் பரவலாகத் தாக்குதல்கள் தலிபான்களுக்கு எதிரான போர் உச்சம்

காபூல், ஜூலை 8

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. நேற்று முன்தினம் அங்கு இரு வேறு இடங்களில் நடந்த தாக்குதல்களில் தலிபான்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டதாக ஆப்கான் அரச தரப்புத் தெரிவித்தது.





ஆப்கானிஸ்தானின் ஹெராத் மாகாணத்தில் உள்ள கராக் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடிகள் மீது தலிபான் ஆயுததாரிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 9படைச் சிப்பாய்களும் தலிபான்களில் 10பேரும் சாவடைந்தனர். அத்தோடு 15 தலிபான்களும், 6 படைச் சிப்பாய்களும் படுகாயம் அடைந்தனர். இரண்டு தரப்புகளுக்கும் இடையே பல மணி நேரம் நீடித்த துப்பாக்கிச் சண்டையிலேயே இவர்கள் சாவடைந்தனர். இதில் தலிபான் இயக்கத்தின் தளபதி முல்லா கவுசுதிங் என்பவரும் சாவடைந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. தலிபான்களின் இந்தத் திடீர்த் தாக்குதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதுங்கியுள்ள தலிபான் ஆயுததாரிகளைத் தேடும் பணியில் படையினர் ஈடுபட்டனர். இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் காந்தகார் மாகாணத்தின் மராப் மாவட்டத்திலும் தலிபான்கள் தங்கியிருக்கும் இடத்தைக் குறிவைத்து மற்றொரு தாக்குதல் சம்பவம் நடந்தது. நேட்டோ தலைமையிலான கூட்டுப்படைகள் நடத்திய இந்த வான் தாக்குதலில் 25 தலிபான்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இந்தத் தாக்குதல்கள் குறித்துத் தலிபான்கள் எந்தத் தகவலும் வெளியிடவில்லை. ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மற்றும் ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுத அமைப்புகளின் தாக்குதல் நடவடிக்கைகளால் ஸ்திரமற்ற அரசியல், சமூக மற்றும் பாதுகாப்புச் சூழல் உள்ளது. நாட்டின் ஒரு சில பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தலிபான்கள், அரச படைகளுக்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இழந்த பகுதிகளை மீட்பதற்காக இராணுவம் பதில் தாக்குதல் நடத்துகிறது. நேட்டோ படைகளும் அங்கு முகாமிட்டுள்ளன.

## ஆப்கானில் தலிபான்கள் தற்கொலைத் தாக்குதல் 12 பேர் சாவு



காபூல், ஜூலை 8

ஆப்கானிஸ்தானின் கஸ்னி நகரில் நேற்று நடந்த குண்டுவெடிப்பில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும் 80 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத் தளம் ஒன்றைக் குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைப் படையினரின் இந்தக் குண்டுவெடிப்புத் தாக்குதலுக்குத் தலிபான்கள் பொறுப்பேற்றனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கஸ்னி நகரில் உள்ள தேசிய பாதுகாப்பு இயக்குநரகத்தின் தளத்துக்கு அருகில் இந்தத் தாக்குதல் நடந்தது. இதில் 8 பாதுகாப்பு ஊழியர்கள், பொதுமக்களில் 4 பேர் உள்ளிட்ட 12 பேர் கொல்லப்பட்டனர். அத்தோடு காயமடைந்துள்ள 80 பேரில் பெரும்பாலோர் மாணவர்கள். அவர்களில் பெரும்பாலோனோரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் சாவுகள் அதிகரிக்கக் கூடும் எனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் ஜாபிஹுல்லா முஜாஹித் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மேம்பட்ட வெடிக்கும் சாதனத்தைப் பயன்படுத்தி உயிர்த் தியாகம் செய்து தாக்குதல் நிகழ்த்தத் தயாராக இருந்த ஒருவரின் மூலம், கஸ்னி நகரில் உள்ள தேசிய பாதுகாப்பு இயக்குநரகத்தின் முக்கிய தளம் குறி வைக்கப்பட்டது.

அந்தத்தளம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களைக் குறிவைத்து நடந்து வருகின்ற மோதல்கள் அதிகரித்திருக்கின்ற நிலையில் இந்தத் தாக்குதல் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாத் தலம் ஆகிறது மாமல்லபுரம்



புதுடெல்லி, ஜூலை 8

இந்தியாவுக்குப் பயணிக்கின்ற சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிப்பதற்காக அங்குள்ள 17 இடங்கள் உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தலங்களாக உருவாக்கப்பட்டன. அந்த 17 இடங்களில் ஒன்றாகத் தமிழ்நாட்டில் சென்னையை அடுத்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மாமல்லபுரம் இடம்பிடித்தது. இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டது. இதை உத்தியோக பூர்வமாக அறிவித்தார் அந்த நாட்டு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். மாமல்லபுரம் கடற்கரைப் பகுதியில் உள்ள பாரம்பரிய மண்டபங்கள், சிற்பங்கள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்வன. அங்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதாலேயே அதைச் சுற்றுலாத்தளமாக அறிவித்துள்ளனர். இந்தப் 17 இடங்களிலும் சுற்றுலா மட்டுமின்றி, அதையொட்டிய கைவினைத் தொழிலை மேம்படுத்தி வேலை வாய்ப்பைப் பெருக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாமல்லபுரம் பல்லவர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இந்துக் கோவில்கள், சிற்பங்களையுடைய மாமல்லபுரத்திலுள்ள சின்னங்களை உலகப் பண்பாட்டுச் சின்னம் என்று 1984ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதவி விலகினார் காங். பொதுச்செயலர்

புதுடெல்லி, ஜூலை 8

இந்தியாவின் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலர் பொறுப்பிலிருந்து ஜோதிராதித்ய சிந்தியா பதவி விலகினார். அண்மையில் நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்ததை அடுத்து அந்தக் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் பதவி விலகி வருகிறார்கள். இந்த நிலையிலேயே அந்தக் கட்சியில் இளம் தலைவர்களில் முக்கியமானவரான ஜோதிராதித்ய சிந்தியாவும் பதவி விலகியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் தலைவரான ராகுல் காந்தி அண்மையில் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது.



## சீனாவைத் தாக்கியது சூறாவளி - 6 பேர் சாவு

பீஜிங், ஜூலை 8

சீனாவின் லியோனிங் மாகாணத்திலுள்ள கையுவான் நகரை நேற்று முன்தினம் மழையுடன் சூறாவளி தாக்கியது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் சின்னாபின்னமாகின. இந்தச் சூறாவளியின் கோரத்தாண்டவத்தில் சிக்கி 6 பேர் சாவடைந்தனர். மேலும் 190 பேர் காயம் அடைந்துள்ளதாகவும், மேலும் 28 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்காவுக்குள் நுழைகின்ற அகதிகளைத் தடுக்கும் முகமாக அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் மெக்சிக்கோ எல்லையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு ஒன்று நடந்தது. அண்மையில் தந்தை ஒருவரும் 2வயதுடைய அவரது மகளும் எல்லையைக் கடக்க முயன்றபோது ஆற்றில் மூழ்கிச் சாவடைந்தனர். இந்த நிலையில் அங்கு எல்லைப் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிஸார் இந்த நிகழ்வுக்காகக் குழந்தைப் பொம்மைகளைப் பயன்படுத்தினர்.

## உணவுக்கான பயணம்

# நாடு கடந்த நடை நரிக் குட்டி சாதனை!

ஒஸ்லோ,ஜூலை 8

வடதுருவப் பகுதியில் வாழ்கின்ற ஒரு வகை நரி இனத்தைச் சேர்ந்த பெண் நரிக் குட்டி ஒன்று சாதனைமிக்க ஒரு செயலைச் செய்துள்ளது.

நோர்வேக்குச் சொந்தமான ஸ்வால்பார்ட் தீவுக் கூட்டத்தில் இருக்கும் ஸ்பீட்ஸ்பெர்ஜன் தீவில் இருந்து வடக்குக் கனடாவுக்கு நடந்தே சென்றுள்ளது பிறந்து ஒரு வயதை எட்டாத இந்த நரிக்குட்டி.

76 நாள்களில் 3ஆயிரத்து 506 கிலோ மீற்றர் தூரத்தைப் பனி படர்ந்துள்ள அங்குள்ள தரை வழியாக நடந்தே கடந்துள்ளது இந்த நரிக்குட்டி. இது தனது நடையைத் தொடங்கிய 21நாள்களில் ஆயிரத்து 512 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பயணித்தது.



சில நாள்களுக்குப் பிறகு தனது பயணத்தின் இரண்டாம் பகுதியில் சுமார் 2ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து கனடாவின் எல்லெஸ்மியர் தீவை அடைந்தது. நாளொன்றுக்குச் சராசரியாக 46 கிலோ மீற்றரை விடவும் சற்று கூடுதலான தூரத்தைக் கடந்த அந்த நரிக்குட்டி, சில நாள்களில் 155 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்துள்ளது.

'நோர்வே போலார்' என்கிற ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் சென்ற ஆண்டு மார்ச் மாத இறுதியில் குறித்த நரிக்குட்டியின் கழுத்தில் பொருத்திய இருப்பிடம் மற்றும் நகர்வுகளை அறியும் கருவி ஒன்றின் மூலமே இந்தத் தகவல்கள் துல்லியமாகக் கணிக்கப்பட்டன.

வடதுருவத்தில் வாழ்கின்ற இந்த இன நரிகள் இளம் வயதில் இருந்தே தங்களின் இரையைத் தேடக் கற்றுக் கொள்கின்றன. கோடை காலங்களில் இவற்றுக்கு அதிக அளவில் உணவு கிடைக்கும். ஆனால், குளிர் காலங்களில் உணவு கிடைக்காது என்பதால் இவை இரை தேடிப் புலம் பெயரத் தொடங்குகின்றன.

அவ்வாறு இரைதேடும் நோக்கிலேயே இந்த இளம் பெண் நரிக்குட்டி இதுவரைப் பதிவு செய்யப்படாத அளவு தூரத்தைக் கடந்துள்ளது என்பது குறிப்பி டத்தக்கது.

# அணுசக்தி ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுக்கள் தேவை

## பிரான்ஸ் அதிபர் தெரிவிப்பு

பாரிஸ், ஜூலை 8

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளுக்கும் ஈரானுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட அணு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவது குறித்த பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்குப் பிரான்ஸ்மற்றும்ஈரான்நாடுகள்ஒப்புக் கொண்டன. இதைப் பிரான்ஸ் அதிபர் எம்மானுவேல் மக்ரோன் சுட்டிக்காட்டினார். 2015ஆம் ஆண்டு ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட 6நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இந்த அணு ஒப்பந்தந்தைக்கைவிடுவதால்ஏற்படும் விளைவுகள் குறித்து அதிபர்மக்ரோன், ஈரான் அதிபர் ஹசன் ருஹானியிடம் தொலைபேசியில் பேசியதாகவும் அப்போது மக்ரோன் கவலைதெரிவித்ததாகவும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கடந்த ஆண்டு இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியதில் இருந்து ஈரான் - அமெரிக்கா இடையே மோதல் போக்கு ஏற்பட்டது. பல முரண்பாடுகள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. ஈரானின் அணுத் திட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு



ஈரான் அதிபர் ருஹானி அழைப்புவிடுத்திருந்தநிலையிலேயேபிரான்ஸ்அதிபர் மக்ரோனின் இந்தக் கருத்து வெளிவந்திருக்கின்றது.



மத்திய தரைக்கடலூடாக ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு ஐரோப்பாவுக்குள் நுழைகின்ற ஆபிரிக்க அகதிகளில் ஒரு தொகுதியினரை லிபியக் கடற்கரையிலிருந்து 34 மைல் தொலைவில் உள்ள ஆலன் குர்தி என்ற இடத்தில் வைத்து அண்மையில் மீட்புக் குழுவினர் மீட்டனர்.



# இன்றைய நாள்

**மேடம்:** சிலர் உங்களை ஏளனமாக பேசலாம். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உணவு உண்பதில் கட்டுப்பாடு நல்லது.

**இடபம்:** குடும்ப பிரச்னைகளை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும். உடல்நலக் குறைவை சரி செய்ய தகுந்த மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மிதுனம்:** அனைவரிடமும்கலகலப்பாக பேசுவீர்கள். தொழில் வியாபாரம் செழிக்கதேவையானஉதவிகிடைக்கும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம்:** எவருக்கும் தகுதி மீறிய வாக்குறுதி தரக்கூடாது. தொழில் வியாபாரத்தில் உருவாகிற குறுக்கீடுகளை உரிய வகையில் சரி செய்ய வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** தியாகம் நிறைந்த மனதுநடன் செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை இஷ்ட தெய்வ அருளால் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** திடீர் பிரச்னையை எதிர்கொள்ள நேரிடலாம்.முக்கியப்பணி நிறைவேறகூடுதல்அக்கறைஅவசியம். தொழில், வியாபாரத்தில் வருமானம் குறைந்த அளவில் கிடைக்கும். வாகனத்தில்மிதவேகம்பின்பற்றுங்கள்.

**துலாம்:** அதிக உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். ஆதாயம் பன்மடங்கு கிடைக்கும். வெகுநாள் வாங்க விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** அன்றாட பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை நிறைவேற்றுவர்.

**தனுசு:** வாழ்வில்சங்கடமானசூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயல்படுவதால் நன்மை கூடும். தொழில், வியாபாரநடைமுறைசீராக இருக்கும். நண்பர், உறவினர் வகையில் உதவி கிடைக்கும்.

**மகரம்:** சிலர் உங்களிடம் பொறாமையுடன் பழகலாம். தொழில் வியாபாரம் செழிக்க மாற்று உபாயம் பின்பற்றுவது நல்லது. தொழிலுக்காக கடன் வாங்க நேரிடும்.

**கும்பம்:** செயல்களில் சமயோசிதம் நிறைந்திருக்கும். பணிகளை திட்டமிட்டபடி நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும்.

**மீனம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவில் குறையும்.

## தடகளப் போட்டி இறுதி நாள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் இன்று திங்கட் கிழமை மதியம் 2 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இன்றைய இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுனர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொள்ளவுள்ளார். (23)



பெண்கள் அஞ்சல் ஓட்டத்தில்

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 16 வயது பெண்ளுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 16 வயதுப் பெண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 56.10 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தனர்.

சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலய அணி 57.20 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி 57.90 செக்கனில் ஓடி முடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

## உயரம் பாய்தலில் ஹெரினா தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 20 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய ஹெரினா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ரங்கில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற தடகளப் போட்டியில் 20 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய ஹெரினா 1.56 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், டிலசால் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய றூப சஜன்சி 1.50 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய நிசாந்தினி 1.35 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.







400 மீற்றர் சட்டவேலி பாய்தலில்

## திருவையாறு ம.வி. மாணவி அனுசியாவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 20 வயது பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி பாய்தல் போட்டியில் திருவையாறு மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய அனுசியா தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ரங்கில் இடம் பெற்ற தடகளப் போட்டியில் சனிக்கிழமை இடம் பெற்ற 20 வயதுப் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி பாய்தல் போட்டியில் திருவையாறு மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய அனுசியா 01: 13.70 செக்கனில் ஓடி முடித்து தங்கப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய கஜன்சிகா 01:21.90 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், பரப்பாண் கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய தர்சிகா 01:22.80 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

## 800 மீற்றர் ஓட்டத்தில் கிருசாந்திக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 18 வயது பெண்ளுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய கிருசாந்தி தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் இடம்பெற்ற தடகளப் போட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற 18 வயதுப் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய கிருசாந்தி 02:34.30 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். திருஞான சம்மந்தர் வித்தியாலயத்தை பிரதி நிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய தனுசியா 02 :40.40 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய துசிகா 02:41 .3. செக்கனில் ஓடி முடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)



1500 மீற்றர் ஓட்டத்தில்

## சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவன் பத்மபிரியன் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்




யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 18 வயது ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய எம்.பத்மபிரியன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்ட ரங்கில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தடகளப் போட்டியில் 18 வயது ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரியை பிரதிநிதித்து வப்படுத்தி பங்கு பற்றிய எம். பத்மபிரியன் 04:09.30 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழையும், தங்கப்பதக்கத்தையும் சுவீகரித்தார்.

நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தை பிரதி நிதித்து வப்படுத்தி பங்குபற்றிய எஸ். டனுசன் 04:09.70 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழையும், வெள்ளிப் பதக்கத்தையும், சதனந்தபுரம் கலைமகள் வித்தியால யத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய கெட்வின் 04:34.40 செக்கனில் ஓடி முடித்துவெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

ஆண்களுக்கான உயரம் பாய்தல்

## கொக்குவில் இந்து மாணவன் ஜினோஸ் தங்கம் வென்றார்



யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 18 வயது ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய ஜினோஸ் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற தடகளப் போட்டியில் 18 வயது ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய ஜினோஸ் 1.94 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், பற்றிமாமகாவித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய நயோசன் 1.78 மீற்றர் தூரம் பாய்ந்துவெள்ளிப் பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும், நெளுக்குளம் கலைமகள். வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய சரண்ராஜ் 1.78மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும், வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினர்.




தேசிய மட்ட ஆண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில்

# யாழ். மாவட்ட இளைஞர் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி

இளைஞர் சேவை மன்றத்தினரால் நடத்தப்பட்ட 31ஆவது தேசிய மட்ட ஆண்களுக்கான இளைஞர் மாவட்ட அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி.

இதன் அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மகரகம தேசிய இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அரையிறுதியில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து பதுளை இளைஞர் அணி மோதியது. முதல் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற முதல் பாதியாட்ட முடிவில் 14:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றனர் யாழ். மாவட்ட இளைஞர் அணி.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட இளைஞர் அணி ஆட்ட நேர முடிவில் 27:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இதன் இறுதியாட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இதே போட்டியில் காலிறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட பெண்கள் அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட அணி மோதியது. இதில் யாழ். மாவட்ட பெண்கள் அணி 26:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து அரையிறுதி வாய்பைத் தவறவிட்டனர். (422)

## எறிபந்தாட்ட நடுவர் பரீட்சை தமிழ் மொழியில் 7 பேர் சித்தி

இலங்கை எறிபந்தாட்டச் சங்கம் நடத்திய எறிபந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சையில் தமிழ் மொழி மூலமான பரீட்சார்த்திகள் 7 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கட்டுநாயக்காவில் நடைபெற்றது. இதில் தமிழ் மொழி மூலமான பரீட்சையில் க.கனகராஜா, பா.தணிகைவேள், ந.செந்தூரன், கு.செந்தில் குமரன், சு.யசீலன், தே.ஜெயதீபன், இ.முகுந்தன் ஆகியோர் சித்தியடைந் துள்ளனர். (422)



## மலிங்கவின் இடத்தை நிரப்புவது கடினம்

மகேல தெரிவிப்பு



நடப்பு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் துடுப்பாட்டம் தொடராக அல்லது நிலையாகப் பிரகாசிக்காதது பாதகத்தன்மையை ஏற்படுத்தியதாக தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் வீரர் மகேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை அணியின் துடுப்பாட்டத் திறமையில் நிலைத்தன்மை இருக்கவில்லை. பெரியளவில் இணைப்பாட்டங்கள் இருக்கவில்லை. எவ்வாறாயினும் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டிகளில் ஈட்டிய வெற்றிகள் இலங்கை அணிக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தின. பந்துவீச்சு திறமையாக இருந்தபோதிலும் லசித் மலிங்க மாத்திரமே உயர்வாகக் காணப்பட்டார். நான்கு உலகக் கிண்ண அத்தியாயங்களில் விளையாடியுள்ள அனுபவசாலியான லசித் மலிங்கவின் இடத்தை நிரப்புவது இலகுவான காரியமல்ல.

இலங்கை அணி தேர்வில் அணி முகாமைத்துவத்தின் செயற்பாடுகளில் தடுமாற்றம் நிலவியது. ஆறு புதிய வீரர்கள் குழாத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அவர்கள் என்னசெய்யவேண்டும் என்பதில் அவர்களிடம் நிச்சயத்தன்மை இருக்கவில்லை. தேர்வுகள் கிட்டத்தட்ட ஒரு கேலிக்கூத்தாக அமைந்தது.

இலங்கையில் திறமை வாய்ந்த வீரர்கள் இருக்கின்றனர். ஆனால் அவர்களின் ஆற்றல்களை மேலும் அதிகரிப்பதற்கு கிரிக்கெட் சுற்றுப் போட்டி கட்டமைப்பில் மாற்றம் அவசியம்.

மேலும் திறமையை வெளிப்படுத்தும் தன்னம்பிக்கை உடைய இளம் வீரர்களுக்கு உரிய வேளைகளில் பன்னாட்டு அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்படவேண்டும். சிலர் பன்னாட்டு அரங்கில் பிரகாசிக்கின்றார்கள். இன்னும் சிலர் தங்களது இடங்களை நிலைநிறுத்திக்கொள்வதற்கு கால அவகாசம் எடுக்கின்றனர். அவிஷ்க பெர்னாண்டோவை எடுத்துக் கொண்டால் அவர் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் பயணத்தில் அவர் பிரகாசிக்கத் தவறினார். ஆனால் ஒரே வருடத்தில் திறமைசாலியாக பரிணமித்துள்ளார்.

ஓரிருபோட்டிகளில்இலங்கை அணி தோல்விகளைத் தழுவினால் குறிப்பாக மோசமாக தோல்வி அடைந்தால் இறுதிச் சுற்றுக்கு செல்லமுடியாது. இலங்கைக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அதை தவற விட்டார்கள். இங்கிலாந்தில் சீரற்ற கால நிலை நிலவுவது இயல்பு. அதற்கு யாரையும் குறை கூறமுடியாது. எனினும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சிறந்த நிலையில் இலங்கை இருந்தது. இலங்கையின் சிறப்பான ஆரம்பத்துக்கு மத்தியில் ஆஸ்திரேலியா பலத்த அழுத்தத்தை எதிர்கொண்டபோதிலும் மத்திய வரிசை சோபிக்காததால் வெற்றி நழுவிப்போனது - என்றார்.

## டோனிக்கு அகவை 38

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் டோனிக்கு பிறந்த நாளான நேற்று ஐசிசி புகழாரம் சூட்டியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் டோனி தற்போது ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார். இவர் இந்தியாவுக்கு இரண்டு உலகக் கிண்ணங்களை வென்று கொடுத்து பெருமை சேர்த்தவர்.

இறுதிக் கட்டத்தில் ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் சிறந்தவர் என்ற பெருமையை பெற்றவர். நட்சத்திர வீரரான டோனிக்கு நேற்று 38ஆவது பிறந்த நாள் ஆகும். இதையடுத்து அவருக்கு ஐசிசி தனது ருவிற்றர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளது. அதில், "இந்திய கிரிக்கெட்டின் வடிவமைப்பை மாற்றிய பெயர் மறுக்க முடியாத மரபு கொண்ட பெயர் எம்.எஸ்.டோனி. இது வெறும் பெயரல்ல" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கோக்லி தெரிவிக்கையில், "டோனி எப்போதும் அமைதியாகவும் ஒருங்கிணைப்பாளராகவும் இருக்கிறார். டோனி எப்போதும் என் தலைவனாக இருப்பார்" - என்றார்.

வடக்கு மாகாண தடகள போட்டி;

## நேற்றைய முடிவின் அடிப்படையில் வலிகாமம் கல்வி வலயம் முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜூலை 8

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

நான்காம் நாளான நேற்று ஞாயிற்றுக் கிழமை வலிகாமம் கல்வி வலயம் 484 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெற்றுள்ளது.

மன்னார் கல்வி வலயம் 460 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும்,

யாழ்.கல்வி வலயம் 398 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், வடமராட்சி கல்வி வலயம் 291 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும்,

வவுனியா தெற்கு.கல்வி வலயம் 208 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும்,கிளிநொச்சி .கல்வி வலயம் 180 புள்ளிகளைப் பெற்று ஆறாம் இடத்தையும், மடு. கல்வி வலயம் 125 புள்ளிகளைப் பெற்று ஏழாம் இடத்தையும்,தென்மாரட்சி கல்வி வலயம் 120 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தையும்,முல்லைத்தீவு கல்வி வலயம் 92 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும்,தீவக கல்வி வலயம் 51 புள்ளிகளைப் பெற்று பத்தாவது இடத்தையும்,துணுக்காய் கல்வி வலயம் 40 புள்ளிகளைப் பெற்று பதினோராவது இடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயம் 8 புள்ளிகளைப் பெற்று பன்னிரெண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன. (23)

## இந்திய அணி கிண்ணம் வென்றால் மகிழ்ச்சிதான்

அக்தர் வெளிப்படை

இங்கிலாந்தில் நடந்து வரும் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணிதான் கிண்ணத்தை வெல்லும் என்று பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் அக்தர் ஆதரவு தெரிவித்தார்.

இது குறித்து அக்தர் மேலும் தெரிவிக்கையில்;

என்னைப் பொறுத்தவரை அரையிறுதியில் இருக்கும் நெருக்கடியை, அழுத்தத்தை தாங்கி நியூஸிலாந்து அணி விளையாடமாட்டாது. என்னுடைய ஆசை எல்லாம் உலகக் கிண்ணத் துணைக்கண்டத்தில் உள்ள நாடுகளில்தான் இருக்க வேண்டும் என்பதுதான். உலகக் கிண்ணத்தில் இந்தியா வென்றால் மகிழ்ச்சிதான். உலகக் கிண்ணத்தை துணைக்கண்ட இந்திய அணி கொண்டுவருவார்கள் என நம்புகிறேன்.

ரோஹித் சர்மாவின் துடுப்பாட்டம் மிகப் பிரமாதமாக இருக்கிறது. அவர் போட்டியின் சூழலை புரிந்து கொண்டு விளையாடுகிறார். அரையிறுதியில் நியூஸிலாந்து அணியும், பாகிஸ்தான் அணியும் புள்ளிகள் ஒரேமாதிரி இருந்தும் நியூஸிலாந்தைக் காட்டிலும் சிறப்பான கிரிக்கெட்டை விளையாடியும் எங்களால் அரையிறுதிக்குச் செல்ல முடியவில்லை. ஒட்ட சராசரி முறையால் எங்களுக்கான வாய்ப்பு பறிக்கப்பட்டது. என்னைப் பொறுத்தவரை ஓட்ட சராசரி வீதம் என்பது மோசமான விடயம் - என்றார்.

**வீடு வாடகைக்கு**

யாழ்.திருநெல்வேலி சந்தியிலிருந்து 500m தொலைவில் பலாலி வீதியில் நான்கு அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

076 459 4800

**வீடு வாடகைக்கு**

ஈச்சமோட்டையில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :- 077 928 0421

# Techno World
## A/L2019

பழைய, புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான

**விசேட செயலமர்வு**

ஆரம்பம் காலை 09.00 மணிமுதல் மதியம் 2 மணிவரை

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 12,13,14 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 15,16 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19,20,21 | I.C.T, விவசாயம், புவியியல், ஊடகக் கல்வி, இலகு கணிதம், சித்திரம் |

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்புகளுக்கு: 0770175346, 0771703549

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

**வாடகைக்குண்டு**

30B, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டட தொகுதியில் முதல்மாடி 426 சதுரஅடி பரப்பளவு கொண்ட Tempered Class கதவு 44 அடி நீளம் X அகலம் 12 அடி முற்றிலும் டைல் பதிக்கப்பட்டு உள்ளக மலசலகூடம், குளியலறை மற்றம் வாகன தரிப்பிட வசதிகளுடன் கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு.

C 32629(04.07)

தொடர்பு: 076 871 6793

**வீடு வாடகைக்கு**

கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள 2 A/C உடன் மற்றும் கட்டிலுடன் கூடிய 3 அறைகள், கோல், சமையலறையுடன் அமைந்த புத்தம் புதிய ஆடம்பர A/C உடன் கூடிய வீடு மாத வாடகைக்கு உண்டு.

076 177 3446
077 955 9442

## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்;
# ரபேல் நடால், ரோஜர் பெடரர் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 2 முறை விம்பிள்டன் பட்டம் வென்றவரும், உலகை தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவருமான ஸ்பெயின் நாட்டு வீரர் ரபேல் நடால் 6:2, 6:3, 6:2 என்ற நேர்செட்டில் பிரான்ஸ் நாட்டு வீரர் சோங்காவை எளிதில் தோற்கடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் சுவிட்சர் லாந்து நாட்டை சேர்ந்த ரோஜர் பெடரர், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த லூகாஸ் பவுல்லியை எதிர்கொண்டார்.

இதில் பெடரர் 7:5, 6:2, 7:6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த வெற்றியின் மூலம் பெடரருக்கு கிடைத்த 350ஆவது வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணத்தில் ரோகித் புதிய சாதனை

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை - இந்திய அணிகள் மோதிய போட்டியில் ரோகித் சர்மா சதம் கடந்து அசத்தினார். இந்த உலகக் கிண்ணத்தில் ரோகித் சர்மாவின் 5ஆவது சதம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் அவர் புதிய சாதனையையும் படைத்தார்.

இவர் ஏற்கனவே தென்னாபிரிக்காவுக்கு எதிராக 122 ஓட்டங்களும், பாகிஸ்தானுக்கு எதிராக 140 ஓட்டங்களும், இங்கிலாந்துக்கு எதிராக 102 ஓட்டங்களும், பங்களாதேஷுக்கு எதிராக 104 ஓட்டங்களும் எடுத்திருந்தார். இதன்மூலம் உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற புதிய சாதனையை அவர் படைத்தார்.

இதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் சங்ககாரா 4 சதங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. அதனை ரோகித் சர்மா முறியடித்தார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் ரோகித் சர்மா 8 ஆட்டங்களில் விளையாடி 647 ஓட்டங்களைக் குவித்து முதலிடத்துக்கு முன்னேறி இருக்கிறார். பங்களாதேஷ் வீரர் ஷகிப் அல்ஹசன் 8 ஆட்டத்தில் 606 ஓட்டங்களை பெற்று 2 ஆவதுஇடத்தில்உள்ளார். 2003ஆம் ஆண்டு உலகக்கிண்ணபோட்டியில் சச்சின் 673 ஓட்டங்கள் எடுத்ததே ஒரு உலகக் கிண்ணப் போட்டியில் வீரர் ஒருவரின் அதிகபட்சமாகும். அந்த அரிய சாதனையை முறியடிக்க ரோகித் சர்மாவுக்கு இன்னும் 27 ஓட்டங்களே தேவையாகும். இந்த உலகக் கிண்ணத்தில் ரோகித் சர்மா இந்தச் சாதனையை முறியடிக்கவும் வாய்ப்புள்ளது.

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி யூக்கிறிஸ்தா மரியதாஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்)

நாரந்தனையை நிரந்தர முகவரியாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி யூக்கிறிஸ்தா மரியதாஸ் நேற்று (07.07.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மரியதாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை மாக்கிறட் தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான தம்பிரட்ணம், பேர்ணடேற், ஜோசப், தனநாயகி, ஜெயராஜா மற்றும் அமிர்தநயகி, கிறிஸ்டி யோகராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும் கர்தரின் (மலர்), றீற்றா, துரைரட்ணம், ஜசிந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பற்றிக் டிறஞ்சன் (உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாணம்), காலஞ்சென்ற பற்றிக் றொபின்சன் (A/L .95, யாழ். இந்துக்கல்லூரி ) ஆகியோரின் அன்புத்தாயாரும் தர்சினியின் (வாசா), அன்பு மாமியாரும் வித்யன், அனுஜிதன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.07.2019) திங்கட்கிழமை 72/19, பிரம்படி லேன் கொக்குவிலிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 2.00 மணிக்கு நாரந்தனை புனித சம்பேதுருவானவர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின் நாரந்தனை சம்பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ம.பற்றிக்டிறஞ்சன் (மகன்)
உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாணம்

071809 8059

**BCHS**

நீங்கள் Canada வில் கல்வி கற்க ஆர்வமுடையவரா,

Canada student visa

No.15 2/1, Off Stanley Road, Sirambiyadi Lane, Jaffna
Call: 021 222 4550/ 076 138 0212

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 07.07.2019 | 2555 | ஊதா |

மகரம்

வெற்றி இலக்கங்கள்: 03 18 30 61

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000 /=

09.07.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடீபதி சனிதா

சீட்டிழுப்பு வாரம்: 464 சீட்டிழுப்பு திகதி: 2019.07.05

வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை

L 17 39 49 72

பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1000

சீட்டிழுப்பு திகதி 2019.07.06 சனிக்கிழமை

Q 09 17 36 55

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 662

வர்ணம் : இளநீலம்

சீட்டிழுப்பு திகதி: 2019.07.07

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,702,900/-

வெற்றி இலக்கங்கள்: 45 58 59 75 J

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.